www.tamilarangam.net



# சஞ்சீவி

மலர் -26

Chanchive 26.udgave



P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1994

# சஞ்சீவி

ஜனவரி ~ பெப்.

மலர்:26

அட்டைப்பட ஓவியம்
T. செளந்தர்

பக்கம்: உள்ளடக்கம்:

3. நோக்கு
4. கவிதை
5. பேட்டி
9. கட்டுரை (மனவருத்தங்கள்)
12. கருத்துக்களம்
18. 3வது கலந்துரையாடல்
25. கவிதை (கடவுளுக்கு ஓர் கடிதம்)
26. சிறுகதை (காற்று வெளியிடை-)
28. கவிதை (சிந்தனைக்குத்தீனி)
34. கட்டுரை (விமலேசுக்காக அழ-)
39. கவிதை (முடியாதது)
41. குறுக்கெழுத்துப்போட்டி இல: 23
43. கடிதங்கள்
48. கவிதை (ஊரெல்லாம்)
49. கட்டுரை (அமெரிக்கராட்சசனால்)

தொடர்புகளுக்கு :

CHANCHIVE
Danmarksgade.10
7500 Holstebro
DANMARK.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

கடந்த வருடங்களில் சஞ்சீவியானது தாமதமாகவும், வருடத்தில் நான்கு இதழ்கள் மாத்திரமே வெளிவந்தது வாசகர்கள் மத்தியில் பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் புதிய வருடத்திலிருந்து சஞ்சீவியை ஒழுங்காகவும் வருடத்தில் ஆறு மலர்களையும் வெளிக்கொணருவோம்.

"சஞ்சீவியை முன்புபோல் விரும்பிப் படிக்க முடியவில்லை" "எல்லாம் ஒரே அரசியல்" என்றும், "சஞ்சீவி இப்போது ஒரு தனித்த அரசியலாக மாறிவிட்டது" என்றும் சில வாசகர்கள் நேரடியாக எம்மோடு கதைக்கும் போது கூறினார்கள்.

சஞ்சீவியில் அரசியல் என்பது தவிர்க்க முடியாதது. கடைசியாக வந்த இதழ்களில் அரசியல் தவிர்ந்த வேறு பொதுவான ஆக்கங்கள் வெளிவந்தது மிகக்குறைவு தான் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளுகின்றோம். இதற்குக் காரணம் முன்பு போல எங்களுக்கு பொதுவான ஆக்கங்கள் வருவது மிகக் குறைவு.

சஞ்சீவியானது தனக்கென குறிப்பிட்ட வாசகர்களையும் சில எழுத்தாளர்களையும் தாங்கித் தான் வளர்ந்து கொண்டு போகின்றது. இங்கு வாழும் பல எழுத்தாளர்கள் பலபல காரணங்களை முன்வைத்து சஞ்சீவியில் எழுதுவதில்லை. முன்பு எழுதிய பல எழுத்தாளர்களும் இப்போது எழுதுவதில்லை.

ஒரு நேர்மையான எழுத்தாளனால் தான் ஒரு நல்ல சமூகத்தையும் மக்களையும் வளர்த்தெடுக்க முடியும். இந்த வகையில் எழுத்தாளர்கள் முன்வந்து பலவிதமான கருத்துக்

(தொடர்ச்சி பக்கம் 33)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தொலைதல்

தொலைந்து கொண்டிருக்கிறேன்.
எனது மண்ணிலிருந்து
எங்கோ தொலைவுகளில்
நான்
தொலைந்து கொண்டிருக்கின்றேன்.

காலடிகளில் தொலைத்த
எதிர்காலக் கனவுகளை
கடல் கடந்து தேடியபடிக்கு
நானும்
தொலைந்து கொண்டிருக்கின்றேன்.


எனது இருப்பும்
இங்கு அர்த்தமற்றது.
இருப்பினும்
இருந்து கொண்டபடிக்கு
நானும்
தொலைந்து கொண்டிருக்கின்றேன்.

எனது உடை
எனது மொழி
எனது கலாச்சாரம்
இப்படியே...
என்னவைகள் எல்லாமே
என்னிடமிருந்து தொலைந்து கொண்டிருக்கிறது.
நானும்
எனது மண்ணிடமிருந்து
தொலைந்து கொண்டிருக்கின்றேன்.

— வேலணையூர் நவமகன் —

www.tamilarangam.net

# சுகாதார மருத்துவத்தாதிகளான யேற்றா, அனமேற்றா ஆகியோருடன் ஒரு கலந்துரையாடல்



கொல்ஸ்ரப்போ நகர எல்லைக்குள் சுகாதார மருத்துவத் தாதிமாராகப் (SUNDHEDSPLEJERSKE) பணிபுரியும் (தமிழர்கள் மத்தியில்) யேற்றா, அனமேற்றா ஆகியோரோடு குழந்தைகள் நலன் பற்றிக் கலந்துரையாடியதை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

---

டென்மார்க்கில் ஒரு குழந்தை பிறந்தவுடன், அந்தக் குழந்தை எங்கு பிறந்ததோ அந்த வைத்தியசாலை மூலம் எங்களுக்கு குழந்தை பிறந்த செய்தியோடு அந்தத் தாயானவள் எப்போது வீட்டிற்குப் போவாள் என்பதையும் அறிவிப்பார்கள். பின்னர் அந்தத் தாயானவளுக்கு 'ரெலிபோன்' மூலமோ அல்லது கடித மூலமோ நாங்கள் எப்போது வருவோம் என அறிவிப்போம்.

எமது நோக்கம்:-

வீட்டுக்குச் சென்று அந்தக் குழந்தை ஆரோக்கியமாக இருக்கின்றதா என்பதையே முதற் கவனத்திற் கொள்வோம். அத்தோடு குழந்தையின் வளர்ச்சி நிலை சமச்சீராய் இருக்கிறதா என்பதோடு தாய்க்கும் குழந்தைக்கும் என்னென்ன உணவுவகைகளை உண்ண வேண்டும் என்பதையும் சொல்லிக் கொடுப்போம். இவற்றோடு குழந்தையைக் குளிப்பாட்டல், உடுப்புக்கள் போடுதல், எப்படி வெளியில் கொண்டுபோக வேண்டும், எந்த வேளையில் கொண்டு போகல் வேண்டும் என்பது பற்றியும் சொல்லுவோம். ஏனென்றால் நாட்டுக்கு நாடு கலாச்சாரத்திற்குக் கலாச்சாரம் வேறுபட்டுக்கொண்டிருக்கிறது. இங்கே குளிர் காலத்தில் எப்படி எப்படியான உடுப்புக்கள் போடவேண்டும் என்ற வழக்க முறைகளும் உண்டு. முக்கியமாக வீட்டில் எப்படி வைத்திருக்கவேண்டும் என்றும் சொல்லிக்கொடுப்பது வழக்கம். இந்த நாட்டு வீட்டு அமைப்புக்கள் மிகவும் ஒடுக்கமானவை. அடிக்கடி சுத்தமான காற்று வந்து போவதற்கான முறைகளையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லிக் கொடுப்போம்.

எமது நோக்கம். தனித்து குழந்தைகளின் நலம் கருதுவது மட்டுமல்ல. வளர்ந்த பிள்ளைகளுக்கும் நாம் உதவி செய்கின்றோம். இங்கே பெரும்பாலான வெளிநாட்டவர்கள் தங்கள் தங்கள் சொந்த உணவு வகைகளையே கூடுதலாக குழந்தைகளுக்குக் கொடுப்பார்கள். நாங்கள் அவற்றைத் தெரிந்து கொண்டு, இன்னும் என்னென்ன உணவு வகைகளைக் கொடுக்க வேண்டும் என உதவி செய்வோம்.

முக்கியமாக வளர்ந்த பிள்ளைகளை வீட்டில் எப்படிக் கவனித்துக் கொள்ளவேண்டும் என்பதைச் சொல்லிக்கொடுப்போம். குழந்தைகளின் பெரும்பாலான விபத்துக்கள் வீட்டுக்குள்ளேதான் நடைபெறுகின்றது. உதாரணமாக தளபாடங்களோடு தட்டுப்பட்டு விழுதல், தானாக ஏறி விழுதல், அடுப்பு போன்றவற்றில் சுடுபடுதல் போன்றவற்றைச் சொல்லலாம். இவையெல்லாம் எல்லாவீடுகளிலும் நடைபெறும் மிகச்சாதாரண நிகழ்வுகள்.

இப்படியானவற்றோடு மட்டும் எமது வேலைகள் முடிந்து விடுவதில்லை. அந்தக் குடும்ப அமைப்பில் ஒவ்வொருவரும் என்னென்னமாதிரிச் செயற்படுகிறார்கள் என்பதையும் நாம் பிரதானமாக அவதானித்து வருகின்றோம். அதாவது அம்மாவும் குழந்தையும் எப்படியிருக்கிறார்கள், அப்பாவும் குழந்தையும் எப்படியிருக்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்வோம். ஏனென்றால் குடும்பக்கட்டமைப்பில் தான் குழந்தையின் உடல்-உள வளர்ச்சி முக்கியமடைகின்றது. பெரும்பாலான இடங்களில் தாயுக்கு சுகயீனம் இருந்தால் குழந்தைக்கும் சுகயீனம் ஏற்படுகின்றது. அதாவது தாயின் நிலையும் பிள்ளையின் நிலையும் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கின்றது. இதே போல் குழந்தைக்கு வருத்தம் ஏற்படும் காலங்களில் தாயின் நிலையும் சரியில்லாமல் இருப்பதைக் கண்டுகொள்ளலாம். அதாவது ஒரு குடும்பமானது எல்லாவகையிலும் முழுமைத்துவம் பெற்றிருக்கா என்பதைக் கவனத்தில் கொள்வோம்.

எங்களின் வருகை :-

'குழந்தை வீட்டுக்கு வந்த முதல்காலங்களில் ஒவ்வொருகிழமையும், அல்லது பதின்நாலு நாட்களுக்கொரு தடவை அந்தக் குடும்பத்திடம் போய் வருவோம். குழந்தையின் வளர்ச்சியைக் கவனித்து, வளர்ச்சியானது சீராக இல்லாவிடில் அடிக்கடி போய் வருவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு குழந்தை வீட்டுக்கு வந்தவுடன் தாயோ, தந்தையோ உடன் புரிந்துகொள்ளமாட்டார்கள். நாட்கள் செல்லச் செல்ல குழந்தை ஏன் அழுகின்றது, ஏன் இப்படிச் செய்கின்றது என்பதைத் தாய் தந்தையர் புரிந்துகொள்ளும் வேளையில் நாங்கள் எங்களது வருகையை நிறுத்திக் கொள்வோம்.

NET WORK :-

தற்போது HOLSTEBRO நகரத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் குழந்தை பெற்ற சிலதமிழ்த் தாய்மார்களை ஒன்று சேர்த்து NET WORK மாதிரிச் செய்து வருகின்றோம்.

தங்களது சொந்தநாட்டையும், பெற்றோரையும் உறவினரையும் பிரிந்துவந்து அகதியாய் இருக்கும் ஒரு குடும்பத்திற்கு குழந்தை ஒன்று பிறந்ததும் ஆறுதலாகவும் பாதுகாப்பாயும் இருக்கின்றது. குறிப்பாக ஒரு தாய்க்கு சொல்லமுடியாத அநுபவங்கள் ஏற்படுகின்றது. ஒரு குழந்தையானது இலங்கையில் இருப்பதற்கும் இங்கே இருப்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. ஒரு சாதாரண அம்மா குழந்தையை வளர்ப்பதில் எனக்குத் தான் பிரச்சினை இருக்கின்றது என நினைத்துக் கொள்கின்றாள். இந்த வேளையில் எல்லாத் தாய்மார்களையும் ஒன்றிணைத்துக் கதைப்பதால் ஒவ்வொருவர் பிரச்சினையை ஒவ்வொருவர் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுவதால் தனக்கு மட்டும்தான் பிரச்சினை இல்லை, எல்லோருக்கும் தான் இந்த நிலையிருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்வதோடு தாயானவள் மேலும் உறுதியாகி விடுவாள். இவ்வாறான NET WORK அமைப்பு முறையை டெனிஷ் தாய்மார் மத்தியிலும், வேறுநாட்டு தாய்மார் மத்தியிலும் செய்து வருகின்றோம்.

கொஞ்சக் காலத்துக்கு முன்னர் அரேபிய நாட்டவர் குழு ஒன்றை நடாத்திவந்தோம். அந்தக் குழுவுக்கு வந்து ஒருவரை ஒருவர் கண்டவுடன் 'அந்தத் தாய் இப்படிச் செய்கிறாள், இந்தத் தாய் இப்படிச் செய்கிறாள், நானும் இப்படிச் செய்துகொள்ளவேண்டும் என்பதோடு, தனக்குத் தெரிந்த வழிமுறைகளையும் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

தாய்மார்கள் எல்லாவற்றையும் எம்மிடமிருந்து தான் பார்த்துக்கொள்கிறார்கள் என்பதில்லை. எங்களுடைய உதவி பெறாத சில தாய்மார்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள பெரியவர்களிடமிருந்து அநுபவங்களையும் அறிவுரைகளையும் பெற்றுக்கொள்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாய்மாரைத் தனித்தனியே சந்தித்து அறிவுரைகளைச் சொல்வதைவிட, எல்லாத் தாய்மாரையும் ஒன்றாய்க் கூட்டிக் கலந்து ஆலோசிப்பதன் மூலம் எங்களுக்கும் நிறையப்பயன் இருக்கின்றது. அவர்களுக்கும் நிறையப்பயன் கிடைக்கின்றது.

## எவ்வளவு காலம் நாம் போகவேண்டும்?

எங்களுடைய HOLSTEBRO நகரசபையானது டெனிஷ் மக்களைவிட வெளிநாட்டவரிடம் தான் அதிகநாட்கள் நாம் போகவேண்டும் என்று முடிவெடுத்திருக்கின்றது. அதாவது டெனிஷ்மக்களிடம் போவதைவிட இரண்டு மடங்கு கூட அல்லது அதற்குக் கூடவும் போய் வருகின்றோம். வெளிநாட்டவர்களின் குழந்தைகளைப் பொறுத்து 2,3,4 வயதைப்பொறுத்து எவ்வளவு காலம் போகவேண்டும் எனநாம் தீர்மானித்துக் கொள்வோம்.

## தாய்மார் கவனத்தில் கொள்ள வேண்டியவை :-

தாய்மாரின் சாப்பாட்டைப் பொறுத்து குழந்தைகளும் தங்கள் தன்மைகளை வெளிக்காட்டுவார்கள். அதாவது தாய்மார்கள் கார உணவுகளை உட்கொண்டால் குழந்தைகளுக்கு வயிற்றில் கோளாறுகள் ஏற்படலாம். ஆனால் சில குழந்தைகள் தாய்மாரின் சாதாரண உணவுவகைகளில் எதுவித பாதிப்பும் இல்லாமல் இருப்பார்கள். சில வேளைகளில் குழந்தைகள் அமைதியில்லா வேளைகளில் தாயானவள் என்னவகையான உணவை உட்கொண்டிருக்கிறாள் என்பதை நாம் இலகுவாகப் புரிந்துகொள்ளோம். உதாரணமாக øst (வெண்ணெய்), முந்திரிகைப்பழம், சொக்கிலேற்வகை, பழச்சாறு (யூஸ்), தோடம்பழம், வெண்காயப்பூ, சரக்கு வகை (காரம்) போன்ற வகைகளைக் குறிப்பிடலாம்.

இவைகளை முறைமையாகச் சாப்பிடக் கூடாது, தவிர்க்கவேண்டும் என்று சொல்லவில்லை. அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடுவதால் தான் பிரச்சனை ஏற்படும் என்று சொல்கிறோம். உ+மாக ஒரு 'கிளாஸ்' யூஸ் குடித்தால் பிரச்சனை இல்லை, ஒரு லீட்டர் 'யூஸ்' குடித்தால் பிரச்சினை. அதிகமாக கோப்பி குடித்தால் குழந்தை நித்திரையில்லாமல் முழிப்பாய் அமைதியில்லாமல் இருக்கும். கோப்பியில் உள்ள caffinen என்ற மூலப்பொருள் குழந்தையைத் தூங்கவிடாது முழித்திருக்க வைக்கும்.

(தொடர்ச்சி பக்கம்: 40)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனவருத்தங்கள்

—:•:—

வருத்தம் 1

## க. ஆதவன்

சில விஷயங்களை நேரடியாக எழுதத் -தான் வேணும். புனைபெயர் போட்டு எழுதிறது எனக்கு விருப்பம் இல்லை. எஸ். ரங்கராஜன் 'சுஜாதா' என்ற புனைபெயரில் எழுதினார். வர்த்தக நோக்கம் கருதி.


எனக்கு வர்த்தக நோக்கம் இல்லை. வந்த் தமே காரணம். அதுவும மனவருத்தம். பல்வேறு வகைப்பட்ட மனவருத்தங்கள் இருந்தாலும், இந்த மனவருத்தம் ரொம்பவும் என்னை வாட்டுகிறது. இலங்கைத் தமிழர்கள் நாட்டைவிட்டு வெகுதூரம் வந்துவிட்டார்கள். 'அகதி' என்ற பெயர் பழைய தாகப் போய்விட்டது. 'புலம் பெயர்ந்தவர்கள்' என் பதும் இலக்கியத்தன்மை வாய்ந்த பெயராகப்போய் -விட்டது. தாம் தாம் வாழும் நாட்டில் பலர் அந்த அந்த நாட்டுப் பிரஜைகளாகவே மாறிவிட்டார்கள்.

இந்தச் சூழ்நிலையில் எம்மவர்கள் எதற் காக 'கள்ளமாக' 'ரெலிபோன்' எடுக்கிறார்கள். 'ஒருவன் செய்த குற்றம் இதுதான், இதனால் இவ -னை எனக்குப் பிடிக்கவில்லை.' என்று சொல் -கிற நெஞ்சழுத்தத்தை எப்போது எமது தமிழ்ச் சமூகம் இழந்தது? புறங்கூறியே வாழ்நாளை ஓட்டும் உபந்நியாசகராக இந்தச் சமூகம் மாறக் காரணம் என்ன? தனது பொறாமையை தூஷணத் -தில் கொட்டித்தீர்க்கும் அளவுக்கு, எனது தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது? தனது சகோதரிக -ளை காப்பாற்ற 'ஏஜன்சி' மாருக்கு 'லட்சங்கள்' கட்டி இங்கே வந்து, கோப்பை கழுவியும், பன்றிப் பண்ணைகளில் வேலை செய்தும் இரத்தம் சிந்தும் தமிழ் வாலிபர்களுக்கு 'மற்றவர்களுக்கு கள்ளமாய் ரெலிபோன் எடுத்து', தூஷணம் பேச நேரம் கிடைத் திருக்கிறது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏதோ ஒரு இயக்கத்தில் சேர்ந்து மன விரக்தியால் விலகி ....! உயிர்ப்பூச்சிக்குப் பயந்து ஓடி வந்த தமிழ் வாலிபர்களுக்கு இதற்கு நேரம் கிடைத்திருக்கிறது. இங்கே வந்துள்ள தமிழர்கள்... ஏதோ ஏதோ காரணங்களுக்காக வந்துள்ளார்கள். தமது காரணங்களை நிறைவேற்றவே அவர்களுக்கு நேரம் போதாது. அப்படி இருக்கையில் - இந்த சேஷ்டைகளுக்கெல்லாம் எங்கிருந்து இவர்களுக்கு நேரமும் உந்துதலும் கிடைக்கிறது?

ஒரு அழகிய 'ரீன்ஏஜ்' பெண்ணை மகளாக வைத்திருக்கும் ஒரு தந்தைக்கு எத்தனை ஆயிரம் 'ரெலிபோன் கோல்கள்'? எனது தமிழ் வாலிபர்கள் என்றைக்குப் பெண்பித்தர்கள் ஆனார்கள்?
பெண், sex என்கின்ற நல்ல விஷயங்களை ஏன் இப்படிக் கொச்சைப்படுத்துகிறார்கள்? 'ரெலிபோன்' எடுத்தாலும் ஏதாவது நல்ல விஷயங்களைப் பரிமாறலாமே! அதற்கூடாக காதல் வசப்படலாமே!

'மோனை விடுறியோ?'
'மோள் எப்ப பெரிசானவள்?'
(தாய் எடுத்தால்) 'நீயும் வாவன்'

இந்த மாதிரியான உரையாடலுக்கு எனது நண்பர்களும் எனது தமிழ்ச் சமூகமும் சீரழிந்து போகவேண்டுமா?

நான் பல்கலைக்கழகத்தில் படித்த காலங்களில் - அங்கே உள்ள 'ராக்கிங்'கில் ஈடுபட்டவன். நாங்கள் பேசாத தூஷணங்கள் இல்லை. புதுத் தூஷணங்கள் கூடத் தமிழில் இயற்றி வைத்திருக்கிறோம். ஆனால் ஒரு போதும் மற்ற மனிதனின் மனம் நோகச் சொல்லவும் மாட்டோம், செய்யவும் மாட்டோம்.

நாங்கள் தண்ணி அடித்திருக்கிறோம். 'கஞ்சா'க் குடித்திருக்கிறோம். பெரகராவில் பெட்டையளை வளைத்திருக்கிறோம். எல்லாம் முன்பாத்திதான். ஆனால் மற்றவனைப் பாதிக்கும் அளவு - மற்றவன் விவாகரத்து எடுக்கும் அளவு - குடும்பத்தில் சண்டை உருவாகும் அளவு - சண்டையினால் சின்னப்பிள்ளையள் வெருண்டு போய் உளவியலாளரை நாடும் அளவு - குடும்பத் தலைவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடிக்கத் தொடங்கும் அளவு— குடும்பத் தலைவி கண்ணீருடன் அன்றாடம் சமைக்கும் அளவு போனதில்லை.

எங்களது 'மூலப்பாத்திகள்' 'பதிடிகள்' எங்களுடன் முடிந்து போகட்டும்.

என் அருமை வாலிபர்களே! (இந்த இடத்தில்- வாலிபர்களை மட்டும் சொல்லவில்லை. 'வாலிபி'களையும் நான் சொல்லவேண்டும். ஏனெனில் நான் 'ஒஸ்லோ' வில் இருந்தபொழுது என் நண்பனுக்கு ஒரு 'கோல்' வந்தது. ஒரு பெண்ணின் தூஷணத்தை கீரிமலை வியாபாரிக்குப் பிறகு அன்றுதான் கேட்டேன்.) வாலிபிகளே நிறுத்துங்கள் இந்தக் 'கள்ள ரெலிபோன் கோல்களை'!

எங்களது தேவைகள் SEX என்றால், ஐரோப்பாவிற்கு வந்து 7 வருடங்கள் ஆகிறது... எத்தனை ஆயிரம் DISCO கள் இருக்கின்றன.

எங்களது தேவைகள் பணம் என்றால் சீட்டும், வட்டியும் இருக்கவே இருக்கின்றன.

எங்களது தேவைகள் 'தண்ணி' என்றால் 'கட்டை' 'கஞ்சா' என்றால் எவ்வளவோ வசதிகள் இருக்கின்றன.

தேவைகளுக்கும் உரிமைகளுக்குமாக எமது இளைஞர்கள் பலர் நாட்டில் செத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நெஞ்சை நிமிர்த்திய வீரத்தாயின் மரபில் வந்த இளைஞர்கள் நாங்கள் கள்ளமாய் ரெலிபோன் எடுத்துத் தூஷணம் பேசுகிறோம்.

தூ - - -


தேவையா இது?

(தொடரும்)

பி.கு:-

எனக்கு ரெலிபோன் இல்லை. இருந்த காலங்களில் எனக்கு 'கள்ளக்கோல்' வரவுமில்லை. எல்லாம் என் தமிழ் மக்கள் பட்ட வேதனைதான். இப்பொழுது 10 நிமிடம் முந்திக் கூட ஒரு நண்பர் சொல்லி அழுதுவிட்டுப் போனார்.

* * * *



www.tamilarangam.net

# கருத்துக் களம்

நட்புடன் சஞ்சீவ் ஆசிரியர் குழுவிற்கு

இதழ் 23ல் வெளிவந்த இன்னும் ஏன் என்ற கட்டுரை தொடர்பாக இரு விமர்சனங்கள் இதழ் 24ல் வெளிவந்தன. இதில் வேதா இலங்காதிலகம் அவர்களால் எழுதப்பட்ட விமர்சனத்துடனான கருத்துடன் நான் முற்றிலும் முரண்படுகிறேன்.

அவரின் கருத்தானது புரிந்துணர்வு என்ற அடிப்படையில் இச்சமூகத்தில் நிகழும் பெண் அடக்குமுறையை ஏற்கத்தான் வேண்டுமென சில ஐரோப்பிய சிறந்த கலாச்சாரத்தை உதாரணம் காட்டி கூறியுள்ளார். இவரின் கட்டுரையில் உள்ள ஒவ்வொரு கருத்தின் மீதும் நான் கருத்தை முன்வைப்பதன் மூலம் தற்காலத்தில் உள்ள பெண் அடக்குமுறையை ஆராய்வதுடன் இவர் (வேதா இலங்காவின்) பெண் விடுதலை சம்பந்தமாக தவறாக புரிந்துள்ளதையும் இனம் காட்ட விரும்புகிறேன்.

"தனிச் சொத்துரிமை அமைப்பு முறை மாற்றப்படும் போது குடும்ப அமைப்பு முறை தாக்கி எறியப்படுமானால் மட்டுமே பெண் முற்று முழுதாக விடுதலை பெறமுடியும்.

"இலங்கா திலகம்" கூறியுள்ள B.B.C ல் ஆசியப் பெண்களின் விபச்சாரம் பற்றி என்னும் தலைப்பில் ஒலிபரப்பான நிகழ்ச்சியைப் பற்றி இவரின் கருத்தானது, விபச்சாரத்திற்கு பணம், கருத்து வேற்றுமைகள், தாம்பத்தியத்தில் ஏற்றத் தாழ்வு, குடும்பத்தில் வன்முறைகள், இவற்றைக் காரணம் காட்டி விபச்சாரமானது பெண் அடக்கு முறையின் ஒரு வடிவம் என்பதை மறுத்ததுடன் இது தமிழ்ச் சமூகத்தில் காணப்படாத ஒரு விடயம் எனவும் நிறுவ முயல்கின்றார். முதலில் விபச்சாரம் என்பது பெண்கள் மீதான பொருளாதார கலாச்சார ரீதியான ஒடுக்கு முறையே. இது ஒவ்வொரு வர்க்க சமூகத்திலும் ஒடுக்கு முறையாளர்களால் ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் நடாத்தப்படுகின்றது. அடிமை உடமை சமூகத்தில் அடிமைப் படுத்தியவர்களாலும் அதன் பின் நிலப்பிரபுத்துவ சமூகத்தில் நிலப்பிரபுக்களாலும் விபச்சாரம் வழி நடத்தப்பட்டது என்பதை பல வடிவங்களில் நிறுவ முடியும். இங்கு நிலப்பிரபுக்களால் சமய கலாச்சாரங்களை காரணம் காட்டி பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்களை இவர்கள் தமது பாலியல் உணர்வுக்காக தமது படுக்கை அறைக்கு அழைத்தனர். இதற்கு காரணம் அன்று நிலப்பிரபுக்கள் மற்றையவர்களின் நிலங்கள் மீது ஆசை கொண்டு அதை அபகரிக்கும் நோக்கமாக போராடும் போரில் பல ஆண் கொல்லப்பட்டதால் பெண்களின் வீதம் ஆண்களை விட அதிகமானது. இந்நிலையில் அதிகமான பெண்களின் பாலியல் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததால் அதைச் சாதகமாகப் பயன்படுத்தி அந்நிலப்பிரபுக்கள் அவர்களை பாலியல் ரீதியில் ஒடுக்க ஆரம்பித்தனர். தமது ஆசைகளை பூர்த்தி செய்தவர்களுக்கு பல பொருட்களை, சொத்துக்களைக் கூட கொடுத்துள்ளனர். இவ்வேளையில் பொருளாதாரப் பிரச்சனையால் சிக்குண்ட பல பெண்கள் பணத்திற்காக தமது உடலை விற்க ஆரம்பித்தனர். அதைச் சாதகமாகப் பயன்படுத்திய நிலப்பிரபுக்கள் அப் பெண்களுக்கு "தேவதாசிகள்" எனப் பெயரும் வழங்கி அவர்களிற்கு சமூகத்தில் தீண்டத்தகாதவர்கள் என்ற பட்டத்தையும் வழங்கினார்கள்.

ஆனால் முதலாளித்துவ சமூகமானது விபச்சாரத்தை ஓர் அங்கீகாரம் பெற்ற தொழிலாக மாற்றியது. இத் தொழில் நடாத்துவதற்கு முதலாளித்துவ சமூகமானது பெண்களைப் பல வழிகளில் தள்ளுகின்றது. இவற்றை எல்லாம் நாம் கவனிப்போமாயின் இங்கு பெண் என்பவள் சுவைக்கப்படும் பொருளாகவும், கவர்ச்சிக்காகவும் பயன்படுத்துவதை காண முடியும். இந்த ஆணாதிக்க சமூகம் அவளது மனிதத்தைப் பறிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வேதா இலங்காவின் "சிவப்புக் கல்லறை பற்றி" கருத்திற்கு வருவோம். இங்கு இவர் Danmark பெண்கள் முற்று முழுதாக சுதந்திரம் பெற்றுவிட்டனர் எனக் கூறியுள்ளார். அங்கு பெண்கள் முற்று முழுதாக சுதந்திரம் பெற்றுவிட்டனரா என்றால் இல்லை. முன்னர் குறிப்பிட்ட நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்தில் இருந்து பெண்கள் விடுபட்டு முதலாளித்துவ கலாச்சாரத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். முதலாளித்துவ வளர்ச்சியின் உற்பத்திக்கும் அதன் அடிப்படையிலான மூலதன வளர்ச்சிக்கும் மேலதிக உற்பத்தி சக்தி தேவைப்பட்டது. அதை ஈடு செய்ய முடியாது போனதையில் (ஆண்களின் பற்றாக்குறை) அதை நிவர்த்தி செய்வதற்காக பெண்களை வீட்டிலே இருந்து வெளியிலே வர அனுமதித்தது. இந்த அனுமதியின் அடிப்படையில் தான் முதலாளித்துவ நாடுகளில் "சமதராதரம்" என்ற போர்வையில் பெண்களை வேலைக்கு அமர்த்துகின்றது. ஆனாலும் முதலாளித்துவ நாடுகளில் பெண்களிற்கென சில வேலை பிரிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இந்நாடுகளில் பெண்களின் சமூக ரீதியான பங்களிப்பும், சமூகப் பாத்திரங்களின் தன்மையும் மாற்றப்படவில்லை. பெண்கள் ஆண் ஆதிக்க சிந்தனைக்குட்பட்டே வாழ வேண்டிய நிலையில் உள்ளனர். ஆனால் வளர்முக நாடுகளில் (3ம் உலக நாடுகளில்) வாழும் பெண்களுடன் வளர்ச்சி அடைந்த நாட்டுப் பெண்களை ஒப்பிடும் போது இங்கு பொருளாதார ரீதியில் பெண்கள் சிறிது விடுபட்டுள்ளனரே தவிர அடிப்படையில் இன்னமும் ஒடுக்கப்பட்டுத்தான் உள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனி அம்மா என்ற உதாரணத்தை பார்த்தால் ஒரு பெண் தனி அம்மாவாக வாழ முயற்சிப்பதில் எந்த விதத்திலும் தவறானதில்லை. ஆனால் இந்த முதலாளித்துவ சமூகத்தில் அப்படி ஒரு பெண் வாழ முற்படும் போது ஆணாதிக்க சமூகமானது அவளை முற்றாக மறுக்கின்றது. காரணம் என்னவெனில் எப்பொழுது இந்த ஆதிக்க சமூகமானது ஆட்டம் காண ஆரம்பிக்கின்றது. இதன் அடிப்படையில் தனது நிலையை தக்க வைத்துக் கொள்வதற்காகவே பெண்கள் மீது தனது ஒடுக்கு முறையை அதிகரிக்கின்றனர்

இவர் கூறும் தனி அம்மாவாக வாழும் பெண்கள் மீது பல வழிகளில் பொருளாதார ரீதியாக இவ்வாணாதிக்க சமூகம் தமது அடக்கு முறையை கட்டவிழ்த்து விடுகின்றது. அவர்கள் வளர்க்கும் பிள்ளைகளின் நிலையையும் பாதிக்கின்றது. ஒரு பெண் தனிமையில் வாழ்வதானால் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பொருளாதாரம் தேவைப்படுகிறது அப்பெண்ணிற்கு. ஒரு குழந்தை கையில் இருக்கும் போது இரட்டிப்பான பொருளாதாரம் அவளுக்குத் தேவைப்படுகின்றது. இங்கு அவளது உழைப்பு முக்கியப் படுவதுடன் அவள் இருவருக்குமாக உழைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப் படுகின்றாள். அத்துடன் ஒரு குழந்தையுடன் இருக்கும் பெண் தனது குழந்தையை சிறுவர் விடுதிக்கு சேர்க்கும் அவசியம் ஏற்படுகின்றது. அங்கு அவளது உழைப்பிற்கு ஏற்ப பணம் அறவிடப்படுகின்றது. இப்படியான நெருக்கடிகளை இச்சமூகம் அவளுக்கு கொடுக்கும் போது அவள் தன்னால் தனிமையில் வாழ முடியாத நிலையில் இன்னொரு துணையை நாட வேண்டியுள்ளது.

சிறார்களின் மனோநிலையைப் பாதிப்பது தொர்பாகப் பார்ப்போமானால் அதற்கு பெண்கள் சுதந்திரம் கோருவது காரணமல்ல. ஆணாதிக்க சமூகமானது பெண்கள் மீது சுமத்தும் மனிதாபிமானமற்ற ஒடுக்கு முறையே காரணம். இந்நிலையில் தாயில் தங்கி வாழும் குழந்தையும் ஒடுக்கு முறைக்குப் பலியாகின்றது. இவ் ஒடுக்கு முறைகளை குழந்தைகள் பராமரிக்கும் விடுதியின் மூலம் அல்லது ஆணாதிக்க சமூகத்தில் வாழ்பவர்கள் மூலம் அக்குழந்தைகளிற்கு ஊட்டப் படுகின்றது. மற்றவர்களிற்கு அப்பா இருக்கும் போது எனக்கு மட்டும் ஏன் அப்பா இல்லை என்ற மனக்குழப்பத்தை அக்குழந்தையின் மனதில் ஏற்பட வழி செய்கின்றது இச்சமூகம். தனது ஒடுக்கு முறையை மற்றவர்கள் கவனத்தில் கொள்ளாத வகையில் குழந்தைகளின் மனோ நிலை பாதிப்பிற்கு காரணம் பெண்கள் எனக் கூறுகின்றது. ஆகவே பெண்கள் ஆண்களுடனே சேர்ந்து வாழ வேண்டும் என நிறுவ முயற்சிக்கின்றது. இவ்வாறான தனது மனிதாபிமானமற்ற அடக்குமுறைக்கு குழந்தைகளையும் பலியாக்குகின்றது. இவ் வாணாதிக்க சமூகம்.

பெண்களின் அடங்கிப் போகும் தன்மை என்ற தலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ம்பில் அவர் கூறும் ஓர் உதாரணத்தை எடுப்போமானால் வீணை திறம்பட வாசிக்கத் தெரிந்த ஒரு பெண் அவளின் கணவருக்கு விருப்பம் இல்லாதிருந்தால் அவள் மேடையில் கச்சேரி செய்யாது, வீட்டில் தனது கலையை வளர்க்கும் முகமாக மற்றைய குழந்தைகளிற்கு அதை பயிற்றுவிக்க வேண்டும் என்று கூறுகின்றார். கணவனுக்கு விருப்பமில்லாத பட்சத்தில் ஒரு பெண் அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் எனவும், அடங்கிப் போகும் தன்மை இச்சமூகப் பெண்களிற்கு இயல்பானது என அர்த்தப் படுத்துகின்றார்.

ஒரு குழந்தை பிறக்கும் போது ஆணாகவோ, பெண்ணாகவோ இருக்கலாம். ஆனால் அக்குழந்தை பிறந்த பின் இச்சமூகத்தால் அது வேறுபடுத்தப் படுகின்றது. ஆண் என்றால் அடக்கி ஆளப் பிறந்தவன் என்றும் பெண் என்றால் பணிந்து ஆணுக்கு அடங்கி வாழ வேண்டும் என்று சொல்லிக் கொடுப்பதை இன்றும் எம்மவர்கள் மத்தியில் காணலாம். இங்கு பெண்மை என்பது இயற்கையாக வருவதில்லை. இந்த ஆணாதிக்க சமூகத்தால் பெண்களிற்கான விதிகளையும் சமூக பாத்திரங்களையும் வகுப்பதன் மூலம் அவளுக்கு உணர்த்துவதுடன் பெண்களை 2ம் தர பிரஜை ஆகவும் மாற்றுகின்றது.

எந்த வர்க்கம் மேலாதிக்கம் பெற்றுள்ளதோ அவர்களின் கருத்தே அங்கு மேலாதிக்கம் செலுத்துகின்றது (மார்க்ஸ்) இன்று முதலாளித்துவ வர்க்கமானது ஆண்களின் நலனை அடிப்படையாக வைத்தே சமூக கலாச்சாரத்தை உருவாக்குகின்றது. இவ் அடிப்படையிலேயே இன்று ஆட்சியில் இருக்கின்றது. பெண்கள் அழகு படுத்தப்படுவதை பார்ப்போமாயின் முதலாளித்துவ சமூகமானது எந்த வழிகளில் எல்லாம் மக்களிடமும் சுரண்ட முடியுமோ அந்த வழிகளில் சுரண்டுகின்றது. ஒரு சுரண்டலை அது பல வடிவங்களில் மக்களிற்குப் புரியாத வகையில் நடத்தி முடிக்கிறது. இதன் அடிப்படையில் தான் ஆண் பெண் என இரு சாராருக்கும் வெவ்வேறான வகையில் அனைத்து பொருட்களையும் விற்பனை செய்கின்றது. இதில் பெண்களுக்கென ஆண்களை விட அதிக விலையிலும் கவர்ச்சியாகவும் பொருட்களை விற்பனைக்கு அனுப்புகின்றது. இவற்றை அணிவதற்காக பெண்களை சமூகமானது இயல்பான முறையில் உணர்த்துகின்றது. அங்கு சந்தைப்படுத்தல் அவசியப்படுகின்றதே தவிர பெண்கள் அழகாக வெளிக்கிட வேண்டுமென்பதற்காகவல்ல. அலங்காரப் பொருட்களை உற்பத்தி செய்யும் போது வியாபாரத்திற்காக அரை நிர்வாண விளம்பரங்களை பயன்படுத்துகின்றது. அத்துடன் அழகு பெறுவதற்கு பொருட்களை மாத்திரம் விளம்பரப்படுத்தும் இச் சமூகம் பெண்களின் தனித்துவமான சிந்திக்கும் வலுவை இழக்கச் செய்கிறது. இம் முதலாளித்துவ சமூகத்தில் ஆண் பெண் எனப் பிரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் உதாரணமாக அண்மையில் இந்தியாவில் பெண்களிற்கு என சில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரட் ஒன்றைத் தயாரித்துள்ளது. இது பெண்கள் மீது உள்ள அக்கறையிலா? இல்லை, தனது இலாபத்தை உயர்த்துவதற்காகவே இதை தயாரிப்படுத்துகின்றது. இந்தியா போன்ற 3ம் உலக நாடுகளில் பெண்கள் புகைத்தல் என்பது சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமல் இழிவான காலமும் இருந்தது. ஆனால் அதே சமூகத்தில் தற்போது பெண்கள் சிகரட் புகைப்பதற்காக தனியான ஒரு சிகரட்டை தயாரித்துள்ளது. அதை இனி இச்சமூகத்திற்கு கொண்டு போகும் போது ஓர் ஆண் சிகரட் புகைக்கிறான் அதனால் பெண்களும் புகைப்பது சரி எனக் கூறி ஒரு பெண் விடுதலை என மக்களுக்கு எடுத்துச் சொல்ல முயலும். முதலாளித்துவ சமூகம் அதற்காக பல புத்திஜீவிகளையும் பயன்படுத்துகின்றது. ஆனால் அது உண்மையான பெண் விடுதலையாக மாட்டாது. பெண் விடுதலையை இச்சமூகம் பல சீரழிந்த முறைகளில் தான் முன்னெடுக்கின்றது. இவற்றிற்கு உதாரணமாக தொலைக்காட்சியில் சில ஐரோப்பிய, அமெரிக்க மாதரணிகள் கோரும் பெண் விடுதலையை கவனிக்கக் கூடியதாக உள்ளது. இவை அனைத்தும் முதலாளித்துவமானது தனது சந்தைப்படுத்தலை ஆதரிப்பதற்காகவே மேற்கொள்கின்றது. காரணம் உலக சனத்தொகையில் ½ பங்கிற்கு மேலானவர்கள் பெண்களே என்பதால் அவளை வேறு வகையிலே சுரண்டலை நடாத்துகின்றது. இதன் அடிப்படையிலேயே கவர்ச்சி அழகுபடுத்தும் பொருட்கள் என் பல்வேறுபட்ட பெண்களுக்கான பொருட்களை அது சந்தைக்கு அனுப்புகிறது. சற்று கவனிப்போமாயின் இவ்வாணாதிக்க சமூகம் ஆணை ஒரு ரசிகனாகவும் பெண்களை ஓர் ரசிக்கப்படும் பொருளாகவுமே உணர்த்தியுள்ளது.

உதட்டுக்கு சாயம் பூசுவதை கணவர் மறுப்பின் அதை சமூகப் பிரச்சனையாக்காது அதை வீட்டிலேயே பேசித் தீர்க்க வேண்டும் என்கிறார்.

இவரின் வாதப்படி சமூகம் பெண்களுக்கு வகுத்த 2ம் தரநிலை சரியானது என கூற வருகின்றார். மேலும் ஒரு பெண் உதட்டுக்கு சாயம் பூசுவதை கணவன் மறுக்கிறான் என்றால் எதன் அடிப்படையில் நின்று மறுக்கிறான் என்பதைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். ஒரு ஆண் இச்சமூகக் கலாசாரத்தில் நின்றபடி ஒரு பெண்ணை மறுப்பானாயின் அது அவளின் சுதந்திரத்தை மறுத்திடும் ஒரு விடயமே. அப்படியாயின் அப்பெண் அதற்கு எதிராகப் போராட வேண்டும். அதை சமூகப் பிரச்சனையாக அவள் வளர்ப்பதும் அவசியம். ஆனால் ஒருவன் பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தில் நின்றபடி ஒரு பெண்ணை இது தொடர்பாக மறுப்புத் தெரிவிப்பானாயின் அதை அவள் எந்த வகையில் கையாள்கிறாள் என்பது ஆராயப்பட வேண்டும். முதலில் அதைக் கூறும் அவன் பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தை கடைப்பிடிக்கிறானா என்பதைக் கவனிக்க வேண்டும். அதன் பின் அவன் மறுப்பு எவ்வகையில் உள்ளது என்பதையும் ஆராய வேண்டுமே தவிர எடுத்த எடுப்பில் எவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூடினும் அதற்கு அடங்கிப் போவது தான் சரியான வழி) எனக் கொள்வது பெண் விடுதலை என்னும் பதத்தை சீரழிக்கும் நோக்கமேயாகும். பெண் விடுதலை என்பதற்கு முதல் எதிரியே இவர்களைப் போன்றவர்கள் தான். சற்று சிந்திக்கப் போகும் பெண்களைக் கூட இக்கருத்துக்களைக் கூறி (அடங்கிப் போகும் கருத்து) மீண்டும் அடங்கி வாழ வேண்டுமென நிறுவ முற்படுகின்றனர். பெண்கள் சுதந்திரமானவர்கள் அவர்களுக்கு ஆண் ஆதிக்க சமூகத்தினால் விதித்துள்ள கட்டுப்பாடுகளை எதிர்த்து அவர்களே போராட வேண்டும். இப் போராட்டம் எந்த வழியில் செல்கிறது என்பதை அவர்கள் கையாளும் தத்துவம் தான் தீர்மானிக்கும். ஒவ்வொரு பெண்ணும் தான் அடங்கிக் கிடக்கும் குடும்பக் கட்டுப்பாட்டிற்குள் இருந்து விடுபட்டு வெளி உலகத்தை அறிவு ரீதியாகப் பார்ப்பதற்கான உரிமையை முதலில் கோர வேண்டும். அந்த உரிமை கிடைக்கும் பட்சத்தில் தான் அவர்களால் தாம் அடங்கி இருக்கும் நிலையை உணர முடியும். ஆனால் இந்நிலை இன்னமும் நமது தமிழ்ச் சமூகத்தில் வரவில்லை. அதை வர விடாது தடுக்கும் முயற்சியில் வேதா இலங்காதிலகம் போன்றவர்கள் கவனத்தில் உள்ளனர்.

ஒரு சிலர் பெண் விடுதலை என்பது ஆண் எதைச் செய்கிறானோ அவற்றை எல்லாம் தாம் செய்ய வேண்டுமெனக் கோருகின்றனர். அது பெண்களை சீரழிந்த கலாச்சாரத்தைக் கடைப்பிடிப்பதற்கு இட்டுச் செல்லும். அதை விடுத்து சமூகத்தில் சீர்திருத்தங்களை கொண்டு வரும் போக்கில் ஆண்களால் அல்லது ஆணாதிக்க சமூகத்தால் கடைப்பிடிக்கப் பட்டு வரும் இன்றைய கலாச்சாரத்தை எதிர்த்துப் போராட வேண்டும். இவ்வாறு போராடுவதன் மூலமே பெண் விடுதலைக்கான விதத்தைப் பெண்கள் பெற முடியும். இன்று ஐரோப்பாவில் உள்ள பெண் விடுதலை வாதிகளால் கதைக்கப் பட்டு வரும் பெண் விடுதலை முதலாளித்துவ சமூகத்திற்கான பெண் விடுதலையே. ஆனால் எமது தமிழ் சமூகத்தில் நிலப்பிரபுத்துவ கலாச்சாரமே அதிகம் உள்ளது. இதை எவ்வாறு தீர்க்க வேண்டும் என்பதைப்பற்றி அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. அதற்கான வழியை அனைத்து பெண்நிலை வாதிகளும் ஓர் அமைப்புருவம் எடுக்கும் பட்சத்தில் மட்டுமே சாத்தியமாகும். "சக்தி, ஊதா, தோழி" போன்ற சஞ்சிகைகள் தான் முயற்சி எடுத்தல் வேண்டும். "ஆணாதிக்கத்திற்கு உட்பட்ட சமூகத்தில் பெண் பிறந்தது முதல் அவள் எவ்வாறு நடாத்தப்படுவது என ஆணாதிக்க சமூகமே தீர்மானிக்கின்றது." சமரி முன் வைத்த கருத்துக்களுடன் உடன்படுகிறேன். ஓர் வர்க்கமற்ற சமூகத்தில் தான் பெண் விடுதலை முழுமை அடையும் என்பதை ஏற்கின்றேன்.

ஆனால் தற்போது இலங்கையை எடுத்துப் பார்த்தால் அங்கு நிலபிரபுத்துவ கலாச்சாரமே உள்ளதை அவதானிக்க முடிகின்றது. அப்படி இருக்கும் இடங்களில் பெண்கள் வர்க்கப் புரட்சிக்கு மார்க்சிச சிந்தனையுடன் பெண் விடுதலையை வென்றெடுப்பது என்பது எவ்வகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சஞ்சீவியின் 3வது கலந்துரையாடல்.

காலம்:- 02-03. சித்திரை 1994. (சனி, ஞாயிறு)

இடம்:- கலாச்சார இல்லம், டென்மார்க்ஸ் கேத-10
7500- கொல்ஸ்ரப்போ.

நேரம்:- சனிக்கிழமை காலை 9.00– மாலை 6.00.
ஞாயிற்றுக்கிழமை காலை 8.00– பி.பகல் 12.00

கலந்துரையாடலில் பங்கு கொள்ள விரும்புவோர் இம்மலரோடு இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து (20.03.1994) க்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முக்கிய கவனத்திற்கு!!

சனிக்கிழமை அதிகாலை வரவசதியற்றவர்கள் (தூர இடங்களில்) வெள்ளிக்கிழமை (31.03.1994) வருபவர்கட்கு தங்குமிடவசதிகள் செய்து கொடுக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro

(17ம் பக்க தொடர்ச்சி)

யில் நடத்த முடியும் என சமர் கூறாது, ஒட்டு மொத்த முடிவை கூறியுள்ளது. சமர் வர்க்க சிந்தனையுடன் பெண் விடுதலையை கையாள்கின்றது. அது சரியானதே ஆனால் நடைமுறையில் எப்படி அவற்றை வென்றெடுப்பது என எந்த ஒரு இடத்திலும் அது கூறவில்லை. அதாவது பெண்களுக்கு வர்க்க சிந்தனையுடன் கூடிய ஓர் அமைப்பு வேண்டும் என கூறும் அதே வேளை நிலவிவரும் கலாச்சாரத்தில் இருந்து எப்படி இந்நிலைக்கு வர முடியும் எனும் கூறுவது இந்நிலையில் அவசியமானதும் ஆரோக்கியமானதும் கூட.

- சுமதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மலர் 25 இல் வெளிவந்த "மூன்றாவது பாதையின் அரசியல் தீர்மானம்" தொடர்பான திரு றொபின், திரு வெலிங்டன் ஆகியோரது கேள்விகளுக்கான பதில்கள் இங்கு பிரசுரமாகின்றது.

சமுதாய மாற்றம் என்பது நிலவுகின்ற உற்பத்தி முறையை இல்லாது பண்ணி, புதிய உற்பத்தி முறையையும், உறவுகளையும் கொண்டு வருவது. ஒவ்வொரு சமுதாய மாற்றத்திலும் பல்வேறு வர்க்கங்கள் பங்கு பெறும். ஒரே வர்க்கம் மாத்திரமே சமுதாய மாற்றத்தில் அதிகார வர்க்கமாக உருவாக்கம் பெறும். அதாவது தலைமையைக் கொண்டிருக்கும். திட்டமிட்ட முறையில் சுரண்டப்படுகின்ற உழைக்கும் வர்க்கம் (பாட்டாளி) அதிகார உருவாக்கம் பெறுகின்ற உன்னதமான சமுதாய மாற்றம் — 'சோசலிசம்' எனப்படும். இது மேற்கத்திய கோட்பாடு அல்ல. உலகின் மூலை முடுக்குகளில் வெட்கக் கேடான வழிகளில் சுரண்டப்படுகின்ற கோடானுகோடி ஒடுக்கப்படும் மக்களின் கோட்பாடாகும்.

சமுதாய மாற்றத்தை விரும்புகின்ற ஒருவன் சாதியை ஒழிக்க போராடுவான். போராட வேண்டும். இப்படிச் சொல்வதால் சாதிக் கலவரங்களை மூட்டி விடுவதாக யாரும் அப்பாவி வைக்கத் தேவையில்லை. சாதிப் போராட்டம் நேரடியாக சமுதாய மாற்றத்துடன் இணைந்தேயுள்ளது. முதலில், பத்தாம் பசலித்தனமான சாதி உறவுகளால் இலாபம் பெறுகின்ற ஆதிக்க சக்திகள் தனிமைப் படுத்தப் படுதல். சாதி வேறுபாடுகள் அற்ற முறையில் உழைக்கும் மக்களை அணியில் திரட்டல். சாதியம் நிலவுகின்ற பொருளாதாரம் ஒழிக்கப்படுதல். புதிய பொருளாதார உறவுகளை மாற்றீடாக கொண்டு வருதல்... போன்ற படிமுறைப் போராட்டங்கள் ஊடாகவே சாதியத்தை ஒழித்துக்கட்ட முடியும். இவ்வாறு தான் சோசலிசத்தை எட்டிப்பிடிக்கவும் முடியும். சாதிப் போராட்டமும், சோசலிசப் போராட்டத்தின் ஒரு பகுதி. சிறு சிறு போராட்டங்களை ஒன்றிணைத்து, ஒரு திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே சோசலிசத்தை அடையமுடியும்.

'ஆணாதிக்கத்திற்கு எதிராகப் போராடுதல்' என்பதும் இவ்வாறானதே. ஆணாதிக்கம் என்பது நடப்பில் நிலவுகின்ற சமுதாயத்தில் மேலாண்மை செலுத்துகின்ற ஓர் இறுக்கமான கருத்தியல் அமைப்பு. இதற்கு இன்று நிலவுகின்ற சமுதாயத்தில் வாழும் ஆண்கள், பெண்கள் அனைவரும் இரையாகிய அடைந்துள்ளனர். இந்நிலையில் ஆண்களுக்கு எதிரான போராட்டமாக எவரும் மட்டமாக விளங்கிக் கொள்ளக்கூடாது. இன்று நிலவுகின்ற சமுதாயம் மூர்க்கத்தனமான ஆணாதிக்க சமுதாயமே. இங்கு பெண்கள் மனித ஜீவனாகக் கருதப்படுவதேயில்லை. விளையாட்டுப் பொம்மைகளாகவும், விளம்பரப் பொருட்களாகவும் கருதப்படுகின்றார்கள். இனப்பெருக்க விலங்குகளாகவும், உழைப்பில் இயந்திரங்களாகவும்.... பெண்கள் இயக்கப்படுகின்றார்கள். இவ்வாறு பல வகைகளிலும் பெண்களை அடக்கியாளும் பழிசார்த்தனமான இச் சமுதாயம் மாற்றப்பட வேண்டும். ஆரம்பம் முதலே அனைத்துப் பெண் அடக்குமுறைக்கு எதிராய் போராட வேண்டும். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், இராணுவத்தால் கற்பழிக்கப்பட்ட பெண்கள்.... என அனைவரும் சுதந்திரமாக வாழும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சமுதாயமாக மாற்றப்பட வேண்டும். தாழ்வு மனப்பான்மையற்ற, ஆணாதிக்க-மற்ற சோசலிச சமுதாயமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதற்காக நாம் எல்லோரும் போராட வேண்டும். சோசலிசப் போராட்டத்தின் பகுதிப் போராட்டமாக இதை முன்னெடுத்துச் செல்லல் வேண்டும்.

இலக்கியங்களூடாக எதையும் சாதிக்கமுடியாத போது போர் மூள்கிறது. இது இலக்கியத்தில் நிற்காது. இறுதி வெற்றி வரைக்கும் தொடரவே செய்யும். ஒடுக்கப்படும் மக்கள், தமது ஒடுக்குமுறை நீங்கும் வரை-யிலும் போராடுவார்கள். ஒடுக்குமுறை இல்லாமல் போகும் சமுதாயம் உருவாகும் வரைக்கும் போராடுவார்கள். இன்று போரை நிறுத்தி சமரசத்தை வைத்துக் கொண்ட பாலஸ்தீனம், கம்பூச்சியா, சோமாலியா என அனைத்தும் மீண்டும் யுத்தத்தைத் தவிர்க்க முடியாதபடி மக்களின் தலையில் நிர்ப்பந்தி-த்தேயுள்ளது.

சீனாவில் மஞ்சு வம்சத்திற்கு எதிராக மட்டுமல்ல, யுத்தப்பிரபு-க்கள், தரகு முதலாளிகள், காலனிய ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை மாவோ வழிநடாத்தினார். சீனப் புரட்சியை வளர்த்தெடுப்பதற்கு ஐக்கிய முன்னணியின் அவசியம் கம்யூனிஸ்ட் கட்சியினால் உணரப்பட்டமையினால் 1923ம் ஆண்டு மார்ச் மாதம் குவாங்டுங்கில் புரட்சிகரமானதொரு அரசை டாக்டர் சன்யாட்-சன்னைத் தலைவராகக் கொண்ட கோமின்டாங் கட்சி அமைத்தது. சன்யாட் சென் கட்சியினை புனரமைக்கவென ஓர் அரசி-யல் தீர்மானத்தை முன் வைத்தார்.

1. சோவியத் ரஷ்யாவோடு கூட்டணி
2. கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒத்துழைப்பு
3. தொழிலாளர், விவசாயிகளுக்கு உதவி செய்தல்

இதை ஏற்றுக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சி கோமின்டாங் கட்சியின் புனரமைப்பில் பெரும் பங்காற்றினர். சன்யாட் சென் காலத்தில் கோமின்டாங் கட்சியில் பல மட்டங்களில் கம்யூனிஸ்டுக்கள் அங்கம் வகித்தனர். கோமின்டாங் கட்சியில் படிப்படியாக வளர்ந்து வந்த சியாங்-சேக், சன்யாட் சென்னின் இறப்பைத் தொடர்ந்து சதிமூலம் கம்யூனிஸ்டுகளை பதவி நீக்கம் செய்து தலைமையைக் கைப்பற்றிக் கொண்டான். இவன் பயங்கர சியாங்கைச் சேக் கும்பலின் "நான்கு பெரிய குடும்பங்களால்" பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட யுத்த பிரபுக்களையும், தரகு முதலாளித்துவத்தையும் பிரதிநிதிப்படுத்திய ஒரு சர்வாதிகாரியானான்.

பல நாடுகளின் படையெடுப்புக்களைத் தொடர்ந்து 1937ம் ஆண்டு சீனா மீது யப்பான் படையெடுத்தது. ஜப்பானிய ஆக்கிரமிப்-புக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளை சியாங்கை சேக் உதாசீனம் செய்தான். இதன் விளைவாக கோமின்டாங் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டது. இத்தருணத்தில் மாவோ ஓர் ஐக்கிய முன்னணிக்கு அறைகூவல் விடுத்தார். இவ் ஐக்கிய முன்னணியானது "மூன்று புதிய கோட்பாடுகளின்" அடிப்படையில் அமைந்தது.

1. ஏகாதிபத்தியத்தை எதிர்த்தல்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



2. சீனத் தேசத்தின் சுய விடுதலை

3. சீனாவுக்குள்ளிருக்கும் சகல தேசிய இனங்களுக்கும் சமத்துவம்.

முதலில் மறுத்த சியாங்கேசேக்கை அவனது தளபதிகளே கைது செய்து வைத்திருந்ததும், பின்னர் 'சூ என் லா'யை மாவோ அனுப்பி விடுவித்தும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஐக்கிய முன்னணி கட்டப்பட்டது. சீன உள்நாட்டு யுத்தத்தின் போது ஏற்பட்ட "அக்டோபர் 10" உடன்பாடும் "நிபந்தனையற்ற சமரசங்களாக" இருந்ததில்லை.

எம் மண்ணில் புலிகள் கூட சமாதானம், ஜனநாயகம், இறைமைப்பாடு, மற்றும் இன்று படுகின்ற போன்றவற்றை பகிரங்கமாக விரும்பும்போதே ஐக்கியம் சாத்தியமாகும். புலிகள் சிறுபான்மை இனங்களினதும், ஏனைய சக்திகளினதும் இருப்பை அங்கீகரிக்க வேண்டும். ஒழிப்புப் போராட்டத்தைக் கைவிட வேண்டும். இலங்கை அரசுக்கும் அதன் பிரசாரத்துக்கும் எதிராகப் போராடும் அனைவருக்கும் ஜனநாயகத்தை வழங்க வேண்டும். அப்பொழுதே ஐக்கியம் உருப் பெறும்.

மாவோ எப்போ "மக்கள் குரல்" என்ற போராட்டத்தை முன்னெடுத்தார்? இவ்வாறு சீனவரலாறுகள் சொல்லவில்லையே. தரகு முதலாளித்துவத்துக்கு எதிராகவும் ஏகாதிபத்திய பிசாசுகளுக்கு எதிராகவும் பத்தாம் பசலி நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராகவும் போராட முன்வந்த அனைத்து வர்க்கப்பிரிவுகளையும் ஓரணியில் திரட்டிப் போராடினார். இது பழைய வகையான ஜனநாயகப் புரட்சியிலிருந்து மாறுபட்ட வடிவத்தைக் கொண்டிருந்தது. அதனால் "புதிய ஜனநாயகப் புரட்சி" எனப் பெயரும் பெற்றது. இவ் வடிவத்தையே மாவோ முன்னெடுத்தார்.

ஒரே மொழியைப் பேசுவதால் எல்லோரும் ஒரே தேசிய இனம் ஆகமுடியாது. ஆங்கிலேயரும், அமெரிக்கரும் ஒரே மொழியைத் தான் பேசுகின்றனர். இதனால் ஒரே தேசிய இனமாக இல்லையே. ஒரு இந்துவையும் கிறிஸ்தவனையும் இலகுவில் பிரித்து அறிய முடிவதில்லை. ஒரு முஸ்லிமை பார்த்த மாத்திரத்தில் அடையாளப் படுத்த முடியும்.

சிங்கள அரசும், புலிகளும் முஸ்லிம் மக்கள் மீது இன ஒடுக்கு முறைகளையும், இனப்படுகொலைகளையும் வெளிவாரியாக பலமாக நடாத்தினார்கள். முஸ்லிம் மக்கள் புறம்பான தேசிய இனத்துக்கான பண்புகளைக் கொண்டிரா விட்டால் இவர்களால், மாறி மாறி இச் சாக்கடைத் தனங்களைச் செய்ய முடியாது போயிருக்கும். முஸ்லிம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களுக்கு பலமான புவிசார் தொடர்ச்சியற்ற துர்ப்பாக்கிய நிலைமையே அவர்களை ஒரு தேசிய இனமாக உணரமுடியாத நிலையில் வைத்துள்ளது. ஆயினும், அவர்கள் தேசிய சிறுபான்மை இனத்துக்கான அனைத்துப் பண்புகளையும் கொண்டேயுள்ளார்கள். புவிசார் தொடர்ச்சி பலமாக இருந்திருக்குமேயானால், வடக்கிலிருந்து விரட்டியடிக்கும் சந்தர்ப்பம் எந்த சக்திக்கும் கிடைத்திருக்கவே முடியாது.

முஸ்லீம் மக்களை தேசிய சிறுபான்மை இனமாக அங்கீகரிப்பதால் தமிழ்த் தேசிய இனத்தினது பலம் ஒரு போதும், ஒல்லுப்போலையெண்டாலும் குறைந்து விடாது. தேசிய சிறுபான்மை இனங்களின் சுய இருப்பையும், முழுமையான சமத்துவத்தையும் அங்கீகரிப்பதே, தமிழ் தேசிய இனத்தின் மிகப் பெரிய, யானை பலமாகும்.

வடக்கில் புலிகள் முஸ்லீம் மக்களின் சுய இருப்பை அங்கீகரிக்கவில்லை. ஆனால், முஸ்லீம் மக்கள் — தமிழ்த் தேசிய இனம் முழுவதையும் தமது எதிரியாக எப்படி பார்க்க முடியாது போனதோ — அதேபோல சிங்கள மக்களையும் நாம் எதிரிகளாகப் பார்க்க முடியாது. இன்றைய அரசு தமிழ் மக்களுக்கு மாத்திரம் எதிரியல்ல; சிங்கள மக்களுக்கும், இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் எதிரியே.

எமது போராட்டம் தமிழ் மக்கள் ஜனநாயகக் குடியரசுக்கானது. அரசினது ஒடுக்குமுறை தொடரும் போது, ஒடுக்கும் தேசம் (சிங்கள மக்கள்) ஒரு புரட்சிகரத் தலைமை தாங்காத போது, ஐக்கிய முறுதலுக்கான வழிகளில் பிரிந்து போவதே சாத்தியம். இது ஐக்கிய முறுதலுக்கான பிரிவினை.

தமிழ் மக்கள் குடியரசுக்கான போராட்டம் புதிய ஜனநாயகப் புரட்சியாகும். இக்கருத்தியலுக்கு மட்டுமே பாசிசத்தை வீழ்த்தும் பலமும், தேசங்களின் சமத்துவத்தைப் பேணும் வல்லமையும் உண்டு.

இன்றைய வரலாற்றின் தேவை மூன்றாவது பாதை. இவ் அடிப்படைத் தீர்மானம் சாத்தியமானதே. இதற்கான தலைவர்களையோ, ஸ்தாபனத்தையோ வரலாறே உருவாக்கும்.

— மூன்றாவது பாதை —

## வாசகர்களின் கவனத்திற்கு!!

தங்கருபனின் "கம்யூனிசத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டு விட்டதா?" என்ற கட்டுரையும், சாந்தனின் "சீன் ஒரு வரலாற்றுத் தடயம்" என்ற கட்டுரையும் அடுத்த இதழில் பிரசுரமாகும் என்பதை அறியத் தருகின்றோம்.

— சஞ்சீவி —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வீரமும் விவேகமும்

வாழும் முறை வாழ்க்கை என்பது மனித அறிவுக்கு எட்டாத மர்மம். கொர்பச்சேவ் தனது பதவி பறிபோகும் என அவருக்கு முன்பே தெரிந்திருந்தால், சோவியத் யூனியனின் பொருளாதார சீர்திருத்தத்தை முன் எடுத்து இருக்கமாட்டார். இந்திய ராணுவம் தாம் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போராட்டத்தில் தோற்றுப் போய்விடுவோமென அவர்களுக்கு முன்பே தெரிந்திருந்தால், இந்திய ராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போரை தொடங்கியிருக்கமாட்டாது. அதே போல்தான் ஐரோப்பாவிலுள்ள தமிழ் சங்கங்களின் தலைவர்கள், தொண்டர்களின் நிலை. முன்பு ஒரு காலத்தில் "சங்கம் வளர்த்த தமிழன்" என்று கூறுவார்கள். ஆனால் இப்போ சங்கடத்தை வளர்த்த தமிழர்களாக இருக்கின்றார்கள். பத்துப் பேரை (சங்கத்தின் தலைவராக இருக்கும் நபர் தனது உயிர் நண்பர்களை கைவிட்ட நிலையில் கூட) ஒன்றிணைத்து ஒரு சங்கத்தை வழிநடத்த முடியாத தலைவர்கள், எப்படி தமிழ் சமூகத்தை அல்லது தமிழீழப் போராட்டத்தையோ விமர்சிக்க முடியும்?

ஐரோப்பாவில் தமிழ் சங்கங்கள் ஆரம்பிக்கும் போது, ஐம்பது, நூறு பேர்களை ஆரம்பிப்பார்கள். ஐந்து, ஆறு வருடம் போனபின் அந்தச் சங்கத்தில் ஐந்து, ஆறு பேர்தான் இருப்பார்கள். அந்த மாதிரி சங்கத்தின் வளர்ச்சி இருப்பதிலிருக்கும் போது எப்படி தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தையோ, நிர்வாகத்தையோ கொச்சைப்படுத்த முடியும்.

வீரம் என்பது போராட்டத்தின் முடிவில் தான் தெரியும். விவேகம் என்பது பொதுவாழ்வின் முடிவில்தான் தெரியும். எனது குடும்பத்தை ஒழுங்குபடுத்த முடியாதவனாக நான் இருக்கும் போது, எப்படி எனது இனத்தின் (சாதி) மேம்பாட்டிற்காகப் பாடுபட முடியும். தமிழ் ஈழத்தில் சாதி என்னும் உணர்வு ஒவ்வொருவரிடத்திலும் இருக்கு. அந்த உணர்வுகள் மோத ஆரம்பித்தால், தமிழீழத்தில் சாதியின் பெயரால் இரத்த ஆறுதான் ஓடும். தன்மானமுள்ள ஒவ்வொருவரும் ஆயுதம் ஏந்துவான். தமிழீழமே சாதியின் பெயரால் சுடுகாடாகி விடும். என்னைப் பொறுத்த வரை (சாதி இல்லை என்று சொல்லவில்லை) வர்க்கப் பிரச்சனை என்பது, பணியாளர், முதலாளி தொழிலாளர் பிரச்சனை. ஒரு நூறு ரூபா சம்பளம் எடுக்கும் போது கைகட்டி நின்றவன் 70.000 ரூபா எடுக்கும் போதும் கை ஏந்து நிலை தான் உள்ளது. ஒருத்தன் உழைப்பில் 10 பேர் உட்கார்ந்து சாப்பிடும் நிலை மாறி ஒவ்வொரு நபரும் சுயமாக உழைக்க வேண்டும். மேல்மட்டத்திற்கு எதிராக கீழே உள்ளவன் போராடத்தான் வேண்டும் என்ற கோட்பாடு அவசியமில்லை. அவ்விசயத்தை ஒரு புரட்சியின் கீழ், ஒரு தேசிய போராட்டத்தின் கீழ், ஒரு தேசிய பொருளாதார வளர்ச்சியின் கீழ் நிச்சயமாக வர்க்கப் பிரச்சனையை வென்று கொள்ள முடியும். ஐரோப்பாவில் வாழும் எமது சிந்தனையாளர்கள், ஐரோப்பாவிலுள்ள நிகழ்கால வாழ்க்கை முறையைத் தான் பார்க்கின்றார்களே தவிர, கடந்த கால கஷ்டங்களை நினைப்பதில்லை. இந்த நிலை எப்படி வந்தது என்பதை கருத்தில் கொள்வதில்லை. எனக்கு அந்தப்படும் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காக இல்லை (அதந்திரம்). அப்படியிருக்கும் போது கடமையை எப்படிப் போட முடியும். அது அடிக்கும் காற்றுக்கு தாக்குப் பிடிக்குமோ? ஐரோப்பாவில் பெண் விடுதலையுண்டு. வீட்டுப்பிரச்சனை இல்லை. நாம் எல்லோரும் சமமாகக் கருதப்படுகின்றோம். எமக்கு செல்வந்தமானவர்களாயும் இல்லாமையைக் கொண்டாடு பவர்களும் உண்டு. இந்த நிலைமை தமிழீழத்தில் வராதா என்று ஏங்குபவர்களும் உண்டு. ஐரோப்பா வாழ்க்கை முறையை தற்போது தமிழீழத்தில் கொண்டுவர நினைத்தால், அது மாட்டுவண்டியில் ஏவுகணையை அடைந்து செல்லும் கதையாக தான் இருக்கும். அடிப்படையை (பொருளாதாரத்தை) பிரச்சனையை மாற்றி யமைக்க வேண்டும்.

வியட்னாம் தந்தை என அழைக்கப்படும் ஹோசிமின் ஆகினும் சரி, ரஷ்ய விடுதலை வீரனான லெனினாகினும் சரி, சீனாவின் விடுதலை வீரன் மாசேதுங் ஆயினும் சரி, அல்லது எந்த தலைவனாகினும் சரி ஒரு வர்க்கத்தில் இருந்து தான் உதயமாகியிருக்கிறான். எனவே, வர்க்கப் போராட்டத்தையும், பெண் விடுதலை போராட்டத்தையும் ஒரு தேசிய போராட்டத்துடன் ஒன்று படுத்தி போராடினால், நிச்சயமாக நாம் அனைத்து விடுதலையையும் வென்றெடுக்க முடியும். எனவே அப்படிப்பட்ட ஒரு போராட்டத்தை வழிநடத்த யதார்த்த கொள்கையுடைய, நல்லதொரு தலைவன் தேவை.

இவ்வுலகில் எந்த விஷயத்தை எடுத்தாலும் ஒரு தலைவன் உண்டு. ஒரு குடும்ப ஆயினும் சரி, ஒரு மதமாகியினும் சரி, ஒரு பாடசாலையாயினும் சரி, ஒரு அரசாங்கமாயினும் சரி எதுவாகினும் ஒரு சிறந்த தலைவன் உண்டு. யதார்த்த அரசாங்கத்தை அமைக்கக் கூடிய நல்லதொரு தலைவனின் புரட்சிகரமான போராட்டத்தை நாம் முழுமையாக ஆதரிக்க வேண்டும். அமெரிக்கா, ரஷ்யா என்ற போர்முனை மாறி, தற்பொழுது பொது நலத்திற்கும் சுயநலத்திற்கும் தான் போட்டி. தமிழ் இனத்தைப் பொறுத்தவரை சுயநலம் தான் அதிகம். அந்த தமிழ் இனத்தின் முன் பொதுவுடமைக் கொள்கையை (சோசலிசக் கொள்கைகள்) வைப்பது மிகவும் கஷ்டமான விஷயம். சோசலிச கொள்கை என்பது இடத்திற்கு இடம், நாட்டிற்கு நாடு வேறுபட்டு உள்ளது. தமிழ் இனத்தைப் பொறுத்தவரை, அவர்களின் மனநிலை, கலாச்சாரம், அறிவுத்திறமை, உணர்வுகள், வாழ்க்கைத்தரம் இப்படி இவை எல்லாவற்றையும் ஆராய வேண்டியுள்ளது. சுயநலவாதியும், பொதுநலவாதியும் என்றைக்காவது ஓரணியில் ஒன்றுபட்டு நிற்க மாட்டான். இவர்களுக்கு மத்தியில் போராட்டம் நடந்து கொண்டேயிருக்கும். தமிழ் மக்களின் மொத்த உணர்வை அறியாது ஒதுங்கிய போக்கில் இருக்கும் எந்த ஒரு தலைவனும் நிலையான ஆட்சிபீடம் ஏறமுடியாது. இந்த உணர்வு ஒவ்வொரு தமிழனுக்கும் வரவேண்டும். நாம் தமிழன், நாம் ஒரு தேசிய இனம் என்ற உணர்வு ஒவ்வொரு தமிழனின் இதயத்திலும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் எமக்குரிய அனைத்து விடுதலையையும் முழுமையாக வென்றெடுக்க முடியும்.

நி. றெபின்
TRIGE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடவுளுக்கு ஓர் கடிதம்

புனிதம் கொண்ட கோயில்கள் என்று
ஆறு காலப் பூஜைகள் கொண்ட தெய்வங்கள்
அழிந்து போகும் நம் இனத்தை காக்க மறந்தது ஏன்

எத்தனை ஞானசம்பந்தர்கள் பட்டினியின் பிடியில்
ஞானப் பால் கொடுக்க எங்கே பார்வதிகள்
இவர்கள் அழும் குரல் பார்வதிக்குத் தாலாட்டா.

உமது பசிதீர பிட்டுக்கு மண் சுமந்தீரே
பட்டினிச் சாவைத் தடுக்க இங்கே
உண்ணாவிரதப் போராட்டம் நியாயமாகாது.
எதைச் சுமந்தால் சோறு கிடைக்கும்.

இந்தப் பிஞ்சுகளின் சாவு விதியென்றால்
மீண்டும் இந்தப்புதிய பிறப்புக்கள் வேண்டாம்
ராஜினாமாச் செய் வேலையை பிரம்மனே

மனித உயிர்கள் தான் உனக்கு வேள்வியா
உமக்கு மட்டும் ஏன் இந்தக் கோவில்கள்...?

-ஆனந்தி-

www.tamilarangam.net

# சிந்தனைக்குத் தீனி

எழுத்தாள இதயங்களே
பொழுது போகவில்லை
என்பதற்காய்ப்
புனைவது சரியில்லை.

எங்கள்
பொழுதுகள் பயனுடன்
போக வேண்டும்
போக வைக்க வேண்டும்,
என்பதற்காய்
எழுதினால்
ஏற்புடையதே.

இன்று.....
தூக்குக் கயிறுகளோடு
எம்மைச் சூழ்ந்துள்ள
பேரினவாத
இராணுவங்கள்
தரும் துன்பங்கள்
எத்தனை.

எம்
சமூகத்தில்
சரித்திரமிழந்து நிற்கும்
சம்பவங்கள் தான்
எத்தனை..?

முகவரியை மட்டுமோ?
முகங்களையே இழந்த
மனிதர்கள் எத்தனை.?

www.tamilarangam.net

பேச்சில் ஒன்று
பின்பற்றலில் வேறாய்
பித்தலாட்டம் செய்யும்
வித்தகங்கள் எத்தனை..?

எழும் இதயங்களே
இவைகள் எல்லாம்
சிந்தைக்கேற மாட்டாதா?

அன்பு நெஞ்சங்களே
எழுத்து எவருக்கும்
உணவு போட்டதாம்
இல்லைத் தான்
ஆனால்
எத்தனையோ பேரின்
சிந்தனைக்குத் தீனி
போட்டிருக்கின்றது.

இந்நிலையில்
உங்கள் எழுத்துக்கள்
சிந்தனைக்கு விடைதரின்
வந்தனை செய்யவியலுமா..?

உறங்கும் இதயங்களை
உலுக்கும் வண்ணம்
உங்கள் எழுத்து
உதயங்கள் இருக்கட்டும்
புனைபவை எல்லாம்
புரட்சிக்காய்
நாளை,
பூபாளம் இசைக்கட்டும்.

— கலைப்பித்தன் -

www.tamilarangam.net

இவன் பாடின பாட்டையே இந்த மரங்களும் அந்த ராமனாதன் Hall ம் மனுசரும் கேட்டவையெண்டால் நீங்கள் பாடினால் என்னவாம் ? .

இப்பிடியொரு நிலமை வருமெண்டுதானே சுத்த வர மதில் கட்டி வாசலுக்கு Security யும் போட்டிருக்கினம். ஆனபடியால் ஏதும் வந்திடும் எண்டெல்லாம் நீங்கள் பயப்பிடாதேயுங்கோ.

நாங்களெல்லாம் உள்ளுக்க இருக்கேக்க புதுசா என்ன மச்சான் வரயிருக்கு ? இவண்ட விசர்க்கதையை விட்டிட்டு தேன்மொழி நீங்க பாடுங்கோ.

தேன்மொழி மறுக்கமுடியாத நிலையில் பாடுவதாக தீர்மானித்துக்கொண்டாள்.ஒரு சில நிமிடங்கள் மெளனம் நிலவியது வினோ உட்பட சுற்றியிருந்த அனைவரும் அவளை நோக்கிக்கொண்டிருந்தனர். "விழியில் விழுந்து, இதயம் நுழைந்து, உயிரில் கலந்த உறவே" என்ற அடியைக் கொண்ட பாடலை பாட ஆரம்பித்தாள். அவளின் சுதி பிசகாத பாடலின் ஏற்ற இறக்கங்களையும் வார்த்தைகளின் அர்த்தங்களையும் வினோ ரசனையுடன் கேட்டுக்கொண்டிருந்தான். இறுதியாக வரும் சோக வரிகளில் தேன்மொழியின் குரலிலும் சோகம் இழையோடியிருந்தது. பாட்டு முடியும் போது அவர்களை சுற்றியிருந்த கூட்டம். இன்னும் அதிகரித்திருந்தது.

உரையாடலின் போக்கு தேன்மொழி வினோ ஆகியோருக்கான உறவுகள் பற்றிய ஆய்விற்கு திரும்பியது.

வினோ உமக்கு தேன்மொழியைக் கனகாலமாக தெரியுமோ? :

ஓ ! நாங்கள் ரெண்டு பேரும் சின்ன வகுப்பிலிருந்தே ஒண்டாக படிச்சுக்கொண்டுவாறம் .அதோடை நாங்கள் relations ம் கூட ,

நாங்க உங்கட Family relationship பற்றி கேட்கேல்லை நாங்கள் அறிய விரும்புகிறது உங்களுக்கிடையான Personal relationship ஐப் பற்றித்தான்'.

நாங்கள் நல்ல Friends.

ஆருக்கு வினோ படம்மாத்து விடுறீர்? பஸ்ஸாலை இறங்கேக்க Lovers போல சள்ளடிச்சுக்கொண்டு இறங்கிறீங்கள்..

பஸ்ஸாலை இறங்கேக்க Lovers மட்டுமதான் கதைத்துக் கொள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எலாம் எண்டு எங்கயாவது சட்டமேதுமிருக்கோ? என்று கேட்கும் போது வினோவின் குரலில் சற்று கோபம் தெறித்தது.

O.K வினோ நீர் கோபிக்கிறீர் போலயிருக்கு. உங்கண்ட Personal matter ஐ விடுவம் நீங்க ரெண்டு பேரும் இண்டைக்கு வரை Friends ஆகத்தான் இருக்கிறீங்கள் எண்டதை நாங்கள் நம்புறம். ஆனா வினோ உங்களைப்போலFriends காலப் போக்கில Friendship என்ற எல்லையைக் கடந்து Lovers ஆக வாய்பிருக்கோ இல்லையோ?

வினோவிற்கு அந்தக் கருத்து நியாயமென மனதிற்குப் பட்ட போதிலும் சத்தமிட்டு வார்த்தைகளால் அதனை ஏற்றுக் கொள்ளுவ தற்கு அவன் தயாராக இருக்கவில்லை. எனவே தலையசைப்பி லேயே தனது உடன்பாட்டை தெரிவித்தான்.

வினோ எதிர்ப்பாலைச்சேர்ந்தFriends க்கும் சாதாரண lovers க்கும் இடையில் என்ன வித்தியாசம் என்று நினைக்கிறீர்?.

"ஒரு boy யும் Girl ம் Friendsஆய் இருப்பதற்கு பல வரைய றைகள் அழுத்தங்கள் இருக்கெண்டுதான் நினைக்கிறன்"என்றுசில நிமிடங்கள் யோசித்து விட்டு பதில் கூறினான்.

வினோ நான் கேட்கிறது கட்டுப்பாடுகள் நிறைந்த எங்கட சமூகத் தைப் பற்றியில்லை. சுதந்திரமான சமூகத்திலே உள்ள Friends, lovers ஐப்பற்றி.

வினோ இத்தகைய உரையாடலை குறிப்பாக தேன்மொழிக்கு முன் பாக மேலும் மேலும் தொடர விரும்பவில்லை எனவே அதனை முடிவுறுத்தும் நோக்குடன் " எனக்கு ரெண்டு பிரச்சனைகள், ஒண்டு சுதந்திரமான சமூக அமைப்பில வாழ்ந்து பார்க்கவேணும் மற்றது love பண்ணிய அனுபவங்களைப் பெறவேணும்.அப்பத்தான் இது பற்றி தெளிவான கருத்தினை வைக்கலாம் என்டு நம்புறன். வெறும் எடுகோள்களின் அடிப்படையில்எதையும் சொல்லேலாது" என்று கூறினான்.

என்ன வினோ இப்பிடிச் சொல்லீட்டீர் ? எங்கட பாடங்களே பெரும்பாலும் எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டுதானே விளக்கப்பட்டிருக்கு, அதை விடும். university enter பண்ணுவதுதான் சிரமம். உள்ள வந்திட்டால் படிப்பைப் பற்றியே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யோசிக்கத்தேவை இல்லை. இங்க நாங்க விரும்பினாலும் lecturers எங்களை fail பண்ண விடமாட்டினம். அதுதான் இங்க பொதுவாச் சொல்லீனம் exams answer paper லை எங்கட index number ஐப் போட்டாலே போதுமாம் pass marks எடுக்கிறதுக்கு, ஆனபடியா அதைப் பற்றி யோசியாதேயும்.

என்னத்தைப்பற்றித்தான் பின்னை serious ஆ யோசிக்கவேணும் ? என்று வினோ சிரித்துக் கொண்டே வினாவினான்.

அதைத்தான் இப்ப சொல்ல வாறன். எங்களுக்கு ரசிக்கத்தக்க தாக எதையாவது கேட்கோணும் என்று ஆசையாய் இருக்கு. அதுக்காக நாங்கள் சில எடுகோள்களை வைத்துக் கொள்ளுவம். ஒண்டு நீர் தேன்மொழியை love பண்ணுறீராம், மற்றது இப்ப உமது உள்ளத்துணர்வுகளை மெல்ல எடுத்துச் சொல்ல தெள்ளு தமிழை அள்ளி வீசப் போகிறீராம்.
வினோவின் மனதில் பலவித எண்ணங்கள் எழ தேன்மொழியை நோக்கினான். சற்றுச் சரிந்திருந்த தனது மூக்குக் கண்ணாடியை ஒற்றை விரலால் சரி செய்தவாறு புன்னகையுடன் அவள் அவனை

ஆவல்ததும்ப நோக்கிக் கொண்டிருந்தாள். அவளின் ஒவ்வொரு அசைவிலும் எவ்வாறு இப்படி நளினமும் அழகும் வந்து சேர்கிறது என்று வினோ தனக்குள் வியந்து கொண்டான். குழந்தைப் பருவத்தில் மனதில் எழுகின்ற அத்தனை எண்ணங்களையும். தேன்மொழியுடன் பகிர்ந்து கொள்வதற்கு வினோ தயங்கியதே இல்லை. வயது வர வர விபரங்களும் பெருமளவில் தெரியவர அதற்கு பிறகுதான் மன எண்ணங்களை உள்ளத்தின் உள்ளே வைத்தே தணிக்கை செய்யும் வழமைகளும் அவனுள்வளர்ந்து வந்தது.

என்ன வினோ யோசனை ? நாங்கள் rag பண்ணுவதாய் நினைக் காதேயும்.நாங்கள் ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ளுவதும் ஒருவரின் திறமைகளை மற்றவர் அறிந்து கொள்ளுவதும் முக்கியம் இல்லையா? தேன்மொழியும் இதுபற்றி எதுவும் நினைக்கப் போறதில்லையாம்,இல்லையா தேன்மொழி ?

தேன்மொழி வார்த்தைகளை விரும்பவில்லை. வார்த்தை பிரயோகங் களால் ஏற்படும் நேரவிரயங்களையும் அவள் விரும்ப வில்லை. தலையசைப்பின் மூலம் தன் சம்மதத்தை தெரிவித்தாள். வினோ ஏதாவது சொல்லியேயாக வேண்டும் என்ற நிலையில் இருந்தான். சுவாரசியமான ஒரு கதையைக் கேட்க தம்மைத் தயார் படுத்திக் காத்திருக்கும் குழந்தைகளாக சுற்றியிருந்த மாணவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வினோவை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். தேன்மொழி தன் பார்வையை தாழ்த்தி ஆனால் வர இருக்கும் வார்த்தைகளுக்காக காதுகளைத் தீட்டிக் கொண்டி ருந்தாள். வினோ இருந்த இடத்திலிருந்து மெல்ல எழுந்து சில அடிகள் நடந்து கொண்டே வார்த்தைகளை உதிரத் தொடங்கினான்.

கனவுலகில் உலவி வர
கண்துயிலத் தேவை இல்லை
தேன்மொழி – நீ என் விழியெதிரே வீற்றிருக்கச் சம்மதித்தால்.

யாழிசையும் குழலிசையும்– என்
செவிகளுக்குத் தேவை இல்லை
தேன்மொழி –நீ மெல்ல வாய்மொழியச் சம்மதித்தால்.

தேவலோகத் தேவதைகள்
தேடிவரத் தேவை இல்லை
தேன்மொழி – நீ எனக்கு வரம் கொடுக்கச் சம்மதித்தால்.

வான்வெளியில் சிறகடிக்க
சிறகுகளும் தேவை இல்லை
தேன்மொழி – நீ என் கரம் பிடிக்கச் சம்மதித்தால்.

வினோ தொடர்ந்து கொண்டே போனான். ragging என்ற நோக்கம் மறக்கப்பட்ட நிலையில் மாணவர்கள் once more once more என்று கூவி ஆரவாரம் செய்து கொண்டிருந்தனர். அந்த ஆரவாரங்களெதுவும் வினோவின் செவிகளுக்கு எட்டவில்லை. மனதில் எழுகின்ற ஆரவாரங்களுக்கு மட்டும் வார்த்தை வடிவம் கொடுத்து அவன் வாய்வழி வழியனுப்பிக் கொண்டிருந்தான் அவனது பார்வை மட்டும் கயலை அல்ல அந்தக்கடலையே உவமையாக்குப் அளவிற்கு விரிந்த தேன் மொழியின் விழிகளில் பதிந்திருந்தது.

oooooooooo

(3ம் பக்க தொடர்ச்சி)

களை எழும் போது சஞ்சீவியானது பல தரப்பட்ட கருத்துக்களையும் தாங்கி வெளிவரும்.

இவ்வருடத்திலிருந்து இறுவர்மலரையும் வெளிக்கொண்டுவர வேண்டும் எனத் தீர்மானித்துள்ளோம். இறுவர்களுக்கான ஆக்கங்களையும் எமக்கு அனுப்பி வைக்கவும். - சஞ்சீவி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விமலேசுக்காக அழ ஒரு தேசம் ராஜினிக்காக அழ ஒரு உலகம் மாத்தயாவுக்காக அழ ....?





ராஜினி

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதித்தலைவர் மாத்தயாவுக்கு புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டு விட்டதாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பிந்திக் கிடைத்த செய்தியொன்று இத்தண்டனை ஜனவரி 16ம் திகதி நிறைவேற்றப்படும் என்றும் தெரிவிக்கின்றது. ஊர்ஜிதமற்ற இச் செய்தி, புலிகளின் இம் முடிவு அவர்களின் உத்தியோக பூர்வமுடிவா என்பதுபற்றியோ அல்லது இத்தண்டனை எவ்வாறு நிறைவேற்றப் படுமென்பது பற்றியோ எதுவும் தெரிவிக்கவில்லை. எவ்வாறாயினும், மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும், இம்மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்பாக அதை நியாயப்படுத்துவதற்கேற்ற வகையில் மாத்தயா மீதான பல குற்றச்சாட்டுக்கள் செவிவழிச் செய்திகளாகப் பரவ அனுமதிக்கப்பட்டுள்ளன என்றும் வடக்கிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இந்திய அரசின் உளவுப்படையான றோவுடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும், இத்தொடர்புகள் மூலம், இந்திய அரசுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பான தகவல்களை வழங்கி வந்தார் என்றும், முன்னாள் யாழ் பிராந்திய தளபதியாக இருந்த கிட்டுவின் கொலைக்குக் காரணமான இந்தியப் படையினரின் நடவடிக்கைகளுக்கு இவர் கொடுத்த தகவல்களே காரணமாயிருந்தன என்றும் வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இப்போது கதைகள் பரவத் தொடங்கியுள்ளன. புலிகளுக்கு எதிராகவோ புலிகளின் உறுப்பினர்களுக்கு எதிராகவோ இத்தகைய செய்திகள் பரவுவதை ஒருபோதும் அனுமதிக்காத புலிகள், இப்போது மாத்தயாவுக்கு எதிராகப் பரப்பப்பட்டு வரும் செய்திகள் குறித்து மௌனமாக இருப்பது அப்படியான செய்திகள் பரவுவதை அவர்கள் விரும்புகிறார்கள் என்பதையே காட்டுகிறது என்று கருத இடமுண்டு. சரியாகச் சொல்வதானால், இச்செய்திகளுக்கான மூலம் புலிகளாகவே இருக்க வேண்டும். புலிகளின் பிரதித்தலைவர் மாத்தயாவுக்கெதிராக, புலிகளைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவிர வேறு யாருக்குத்தான் இத்தகைய செய்திகளைப் பரப்பும் துணிவு - அதுவும் யாழ்ப்பாணத்தில் பரப்பும் துணிவு இருக்கமுடியும்?

இப்போது மரணதண்டனை விதிக்கப் பட்டுள்ள மாத்தயா என்கிற மகேந்திர ராஜாவிற்கும் புலிகளின் தலைவருக் கும் இடையில் முரண்பாடு வெடித்துள் ளதாக கடந்த 1990 யூன் யுத்த ஆரம்பத் தின் போதே சில பத்திரிகைகள் எழுதி யிருந்தன. மாத்தயாவால் உருவாக்கப் பட்ட 'விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி' என்ற அரசியல் கட்சியின் செயற்பாடு முடக்கப்பட்டதும், பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்த போதே திடீரென யுத்தம் வெடித்ததும், மாத்தயாவின் கையிலிருந்த அதிகாரங் களை பிரபாகரன் முழுதாக தனது கைக ளில் எடுத்துக் கொண்டதன் விளைவு களே என்று அப்போது பேசப்பட்டது. அதன் பின்னான கடந்த மூன்றரை ஆண்டுகளாக மாத்தயாவின் குரலை யாருமே கேட்க முடியவில்லை. அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்ற செய்திகள் பின்னர் அடிபட்டன. ஆயினும் அப்போதெல்லாம் இப் போது பேசப்படுவது போன்ற குற்றச் சாட்டுகள் மாத்தயா மீது காட்டப்பட்ட தில்லை. இலங்கை அரசுடனான பேச்சு வார்த்தைகள் தொடர்பாக பிரபர்கர னுக்கு இருந்த சந்தேகங்களை பிரபாக ரன் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்ததா கவும் மாத்தயாவின் அரசியல் கட்சி அமைத்தல், பேச்சுவார்த்தை நடாத்தல் போன்றவற்றைப் பிரபாகரன் தொடக் கத்திலிருந்தே எதிர்த்து வந்ததாகவும் பிரபாகரனால் வழங்கப்பட்டிருந்த கால அவகாசத்துள் பேச்சுவார்த்தை மூலமாக எதையாவது செய்யலாம் என்ற விடயத்தை மாத்தயாவால் நிரு பிக்க முடியவில்லை என்றும் இதனா லேயே பிரபாகரன் தனது பொறுப்பில் அனைத்து விடயங்களையும் கையேற் றுக் கொண்டு விட்டார் என்றும் செய்தி கள் வெளிவந்தன. ஆனால் இப்போது அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங் களோ மிகப் பாரிய குற்றங்களாகவும் என்றென்றைக்கும் மாத்தயாவின் பெயருக்கு களங்கம் கற்பிப்பவையாக வும் அமைகின்றன.!

தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாற் றில் உள்முரண்பாடுகள் ஆயுதமுனை யில் தீர்க்கப்பட்டமைக்குப் பல உதார ணங்கள் உண்டு. ஆயினும் பெரும்பா லானவை 'வீரமரணம்', 'தியாகம்' என்ற மகுடங்களுக்குக் கீழேயே நிறை வேற்றப்பட்டு வந்துள்ளன. முழு அள வில் பிரபல்யம் பெற்ற பிரபாகரனுக்கு அடுத்தவர் என்று பேசப்பட்ட ஒரு முக் கியஸ்தர் ஒருவர் இப்போதுதான் முதன் முறையாக 'துரோகி' என்ற முத் திரையின் கீழ் 'தண்டிக்கப்பட' உள் ளார். இதற்கு முன்பும் இவ்வாறு ஒரு சிலர் தண்டிக்கப்பட்டுள்ள போதும், அவர்களில் யாரும் மாத்தயா அளவுக் குப் புகழ் பெற்றவர்களோ, மாத்தயா அளவுக்கு முக்கிய பொறுப்பில் இருந்த

www.tamilarangam.net

வர்களோ அல்ல. கடந்த பத்தாண்டுகட்கும் மேலாகப் புலிகள் இயக்கத்தின் மிகவும் சக்திவாய்ந்த ஒருவராகவும் ஏன் அதன் உயிர் நாடி என்று சொல்லக் கூடிய அளவிற்கு முக்கியமானவராகவும் இருந்த மாத்தயாவின் வரலாறு இவ்வாறு முடியக் கூடும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. ஏன் அவரே கூட எதிர்பார்த்திருக்கப் போவதில்லை.

மற்றெவருக்கும் குறையாத பங்கு மாத்தயாவுக்கு உண்டு. வன்னிப் பிரதேசத்தின் தளபதியாக இருந்த காலத்தில் மாத்தயா புலிகள் இயக்கத்தை ஒரு 'புலிகள்' இயக்கமாகக் கட்டி எழுப்புவதில் ஆற்றிய பங்கைப்பற்றி அப்போதெல்லாம் வியந்து பேசாத புலிகளை வடக்கில் காண முடியாது. மாற்று இயக்கங்களை வேரோடு கிள்ளி எறிவதில் அவர் எவ்வளவு நுணுக்கமாகச் செயற்



ஆனால் வரலாறு எதிர்பார்த்திருந்திருக்கிறது போலும் -பிரபாகரனின் வடிவில்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வரலாற்றில் மாத்தயாவுக்கு மறுக்க முடியாத ஒரு இடம் உண்டு. 1983இலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக இயக்கத்தைக் கட்டி எழுப்பியதில்

பட்டார் என்பதனை புலிகள் அப்போதெல்லாம் பெருமையுடன் பேசிக் கொண்டார்கள். கிட்டுவின் காலும் போய் அவர் வெளியேறிய பின், முழு அளவில் இயக்கத்தை வழிநடாத்திச் சென்றவர் அவர் என்றும் அவரது சிறப்பான தலைமையின் கீழ்தான் புலிகளின் உளவு ஸ்தாபனம் பலமாக வளர்ந்தது என்றும் புலிகள் மெச்சிக் கொள்வ

www.tamilarangam.net

துண்டு.

இந்தியப்படை வந்திருந்த போதும் சரி, அதனுடன் மோதிய போதும் சரி பலாலி முகாமில் 'சைனைட்' அருந்திப் புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட பல புலி முக்கியஸ்தர்கள் இறந்த போதும் சரி (இப்போது அவர்களுக்கு சயனைட் வழங்கி சாகவைத்தவர் இவரே என்றும் பேச்சு அடிபடுகிறது) அவரது இராஜதந்திரம் வெகுவாகப் பாராட்டப்பட்டது. வடமராட்சி ஒப்பிரேசன் லிபரேசனின் போது பருத்தித்துறையை இராணுவம் நெருங்கிக் கொண்டிருக்கையில் துப்பாக்கிகளை ஒழுங்கைக்குள் போட்டு விட்டு புலிகள் ஓடினர் என்றும் அதைக் காப்பாற்ற மாத்தயா 'குறூப்' வந்ததாகவும் பேச்சுக்கள் அடிபட்டன.

இவ்வளவுடன் மாத்தயாவின் பணி நின்று விடவில்லை.

கொழும்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தும் வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைச் சுட்டு விட்டு பிறகு அவர்களைத் துரோகி எனப் பட்டம் சூட்டியதும், யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட விரிவுரையாளர் ராஜினி திரணகம சுடப்பட்ட போது அவரையும் துரோகிகள் பட்டியலில் சேர்த்ததும், உதிரியாக இருந்த பல ஜனநாயக சக்திகளைத் துரோகிகள் என்ற பெயரில் பிடித்து வதைமுகாம்களுக்கு அனுப்பவோ, கொல்லவோ, உத்தரவுகளை வழங்கிய போதும் மாத்தயா புலிகளின் உண்மையான விசுவாசியாகவும், சிறந்த தேசபக்தனாகவும் தான் புகழப்பட்டார். யாழ் பல்கலைக் கழக மாணவனான விஜிதரன் கடத்திச் செல்லப்பட்டதை எதிர்த்து நடந்த பல்கலைக் கழக மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை தலைமையேற்று நடாத்திய மாணவன் விமலேஸ்வரன், அப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்து ஆற்றிய உரையின் போது தெளிவாகவே குறிப்பிட்டான்: ''இப் போராட்டம் விடுதலைப் போராட்டத்திற்கோ எந்த ஒரு விடுதலை இயக்கத்திற்கோ எதிரானது அல்ல. மாறாக இவ் விடுதலைப் போராட்டம் சரியாகவும் வெற்றிகரமாகவும் அமைவதற்கு அடிப்படையான ஜனநாயகத்திற்கானதாகும். விடுதலைப் போராட்டம், போராடும் மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்க வேண்டும் என்பதற்கானதாகும்... தேசத்தின் மீதும் அதன் விடுதலையின் மீதும் உள்ள விருப்பாலும் அக்கறையாலுமே நாம் இப் போராட்டத்தில் இறங்குகின்றோம்''.

ஆனால், அவன் புலிகளின் கண் முன்னே துரோகியானான்.

மரண தண்டனைக்குரிய குற்றவாளியாகிப் போனான்.

அப்போதெல்லாம் மாத்தயா ஒரு தேச பக்தனாக இருந்தார்.

அவனைத் துரோகி என்று எந்த இயக்கத்தின் சார்பில் அன்று மாத்தயா கூறினாரோ அந்த இயக்கத்திற்கே இன்று

www.tamilarangam.net

மாத்தயா துரோகியாய்ப்போனார் என்பது வரலாறு காட்டும் ஒரு அற்புதமான முரண்நகை.

வரலாறு எதையும் மறந்து விடுவதில்லை என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம்.

'ஒவ்வொரு அரசியற் தவறுகட்கும் இரத்தத்தால் பதில் சொல்ல வேண்டியிருக்கும்' என்றார் ஒரு அரசியல் மேதை.

புலிகள் இந்தியாவை சார்ந்து நின்றதற்காக எமது மக்கள் பின்னாளில் இரத்தத்தால் கொடுத்த விலை அளவற்றது.

தேசத்தின் ஜனநாயக சக்திகள் அவைவரையும் துரோகிகள் என்று கூறிச் சிறை வைத்தோ, கொன்றோ, நாட்டைவிட்டு விரட்டியோ இல்லாதொழித்த போது, புலிகள் தமது சொந்த இருப்புக்கான ஜனநாயகத்தையும் சேர்த்தே விரட்டினார்கள்.

அதற்கான விலையை எமது மக்கள் 1990 யூனிலிருந்து இன்றுவரை செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்..

ஜனநாயகத்துக்காக குரல் எழுப்பிய நபர்களை, மாற்று அரசியற் கோட்பாட்டை நம்பியவர்களை துரோகிகள் என்று கூறி அதிகாரம் செலுத்திய மாத்தயா இன்று அதே காரணத்துக்காக தனது உயிரை விலையாகக் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

புலிகளால் இதுவரை மரண தண்டனை வழங்கப்பட்டோர் பட்டியலில் அதிகளவு பரிதாபகரமான பெயராக மாத்தயாவின் பெயர் அமைந்துவிடப் போகிறது.

அதிகளவுக்கு நியாயப்படுத்தப்படக் கூடிய ஒன்றாக அது ஆகிவிடப் போகிறது.

ஏனென்றால் மற்றவர்களைப் போலல்லாமல் மாத்தயா பற்றிய நல்ல செய்திகளை சொன்னவர்களும் அவர்களே. அவர்கள் சொன்ன நல்ல செய்திகளை நம்பிய உலகம், இன்றைய கசப்பான செய்திகளையும் நம்பத்தான் வேண்டியிருக்கிறது.

உண்மையான மாத்தயா யார் என்பதை மற்றெல்லோரையும் விட அவர்களே அதிகமாக அறிவர்.

ஒரு ராஜினியை, ஒரு விமலேஸ்வரனைப் போல மாத்தயா, மக்களால், அவர்களது மக்கள்சார்ந்த நடவடிக்கைகளால் அறியப்பட்டவர் அல்ல. புலிகளால் அறிவிக்கப்பட்டவரே!

மக்கள் மத்தியிலிருந்து வந்த மக்களின் மதிப்புப் பெற்ற சக்திகள் மீதான தீர்ப்பை எழுத புலிகளுக்கு அனுமதித்த எங்கள் தேசம், மாத்தயா பற்றிய தீர்ப்பை எழுத அவர்களுக்கு உரிமையை மறுக்க முடியுமா?

விமலேசுக்காக அழ தேசமும், ராஜினிக்காக அழ ஒரு உலகமும் இருந்தது.

மாத்தயாவுக்காக அழ அவரது மனைவி கூட இருப்பாரா என்பது தெரியவில்லை.



தொடர்ச்சி பக்கம் 52

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முடியாதது....

முடியாததை
என்னிடம் கேட்காதீர்கள்.
சூரியனை நோக்கி நடக்கும் படியும்
நட்சத்திரங்களைத் துரத்தும் படியும்
கேட்காதீர்கள்....
கடலை வற்றப்பண்ணும் படியும்
தினத்தின் ஒளியைப் பிடுங்கும் படியும்
என்னைக் கேட்காதீர்கள்

நான் ஒரு மனிதன் மட்டுமே
எனது விழிகளையும், எனது காதலிகளையும்
எனது பாலிய நினைவுகளையும்
கைவிடும்படி கேட்காதீர்கள்

ஓர் ஒலிவ் மரத்தின் நிழ் வளர்ந்தேன்
எனது தோட்டத்து
அத்திப் பழங்களைப் புசித்தேன்.
நிமிர்ந்து நின்ற எமது
முந்திரிகைத் தோட்டத்தின்
நல்ல சுவையினைக் குடித்தேன்.
பள்ளத் தாக்கில் உண்டாகிய
கள்ளி மரத்துப் பழங்களைச் சுவைத்தேன்
இப்படி இன்னும் எவ்வளவோ.....
பட்சிகள் எனது காதுக்குள் பாடின.
எமது வயல்களினதும், நகரங்களினதும்
சுதந்திரக் காற்று
எப்போதுமே எனக்கு நெருக்கமாக வந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனது நேசிதனே !
எனது சொந்த தேசத்தைக்
கைவிடு என
நீ என்னைக் கேட்க முடியாது.

பிரெஞ்சு மூலம்:- FAWZI AL ASMAR.
தமிழில் க. கலாமோகன்.

[FAWZI AL ASMAR, இவர் அரபு மொழி பேசுகின்ற பாலஸ்தீனியக் கவிஞர். 1970 ஆம் ஆண்டு இஸ்ரேலியச் சிறையொன்றில் இருந்த போதே இந்தக் கவிதை இவரால் எழுதப்பட்டது. "நாட்டை விட்டு வெளியேறுவதற்குச் சம்மதம் என்றால்......" என்ற உடன்படிக்கையுடனேயே இவர் விடுதலை செய்யப்பட்டவர். CENT POEMES EN EXIL என்ற பிரெஞ்சு மொழியிலான புகலிடக் கவிதைத் தொகுப்பிலிருந்தே இக்கவிதை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.]

---

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியான உணவு வகைகளை உண்ணும் காலங்களில் குழந்தைக்குப் பாதிப்பு இல்லாவிடின், தாய்மார் தாங்கள் வழமைபோல் உணவை உட்கொள்ளலாம். நல்ல சத்து உணவுவகைகளை உட்கொண்டு உறைப்புச்சாப்பாட்டைக் குறைக்கலாம். 3, 4, 5 மாதங்களின் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக உறைப்புச் சாப்பாட்டைச் சாப்பிட முயற்சிக்கலாம்.

நாங்கள் பல இடங்களுக்குப் போகின்ற வேளையில் குழந்தைகள் அதிகமாக சத்தி எடுத்தல் பற்றிக் கேட்கிறார்கள். தாயானவள் தான் சாப்பிட்ட சாப்பாட்டின் காரணமாய்த் தான் குழந்தை சத்தி எடுக்கிறதோ என நினைக்கிறாள். ஆனால் அதுவும் காரணமாக இருக்கலாம். ஆனால் அது தான் மட்டும் காரணம் என்று சொல்ல முடியாது. குழந்தைகள் சத்தி எடுப்பது ஒரு சாதாரண விடயம். இதற்காகப் பயப்பிட வேண்டியதில்லை.




[மிகுதி அடுத்த இதழில்]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி

## இல :23



குறுக்கெழுத்துப்போட்டியில் வாசகர்கள் ஆர்வம் காட்டுவது குறைந்து காணப்படுகின்றது. இருந்தும் ஆவலுடன் எதிர்பார்ப்போருக்கு எமது நன்றிகள்.

பரிசுகளாக கவிதைத்தொகுப்பு, சிறுவர்நூல்கள், ஏனையசஞ்சிகைகள் என்ற வகையில் அனுப்பிவைக்கப்படும். சஞ்சீவி உங்கள் கைகளுக்கு காலக்கிரமத்தில் கிடைத்ததும், 15 நாட்களுக்குள் கு.எ.போட்டி-யின் பூர்த்தி செய்த தாளினை சஞ்சீவிக்கு அனுப்பிவையுங்கள். போட்டியின் பரிசுக்குரியவர்களென சஞ்சீவியில் பெயர்கள் வெளியா-னோரில் சிலருக்கு பார்சில்கள் கிடைக்கவில்லையென அறிகின்றோம். அப்படி பார்சில்கள் கிடைக்கப்பெறாதோர் சஞ்சீவியுடன் தொடர்பு-கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். (எழுத்துமூலம்).

இடம்-வலம்:

1 . 3: மனிதன் தனது அறிவைப்பெருக்கிக்கொள்ள இது இன்றியமையாதது

5 . 7: இதனை பிரச்சனை எனலாம்

11.14: சந்தர்ப்பம் என்பதனை இப்படியும் சொல்வர்.

21.24: எமது நாட்டில் இதிலிருந்து எடுக்கப்படும் சாறுமூலம் கூடுதல் சீனி உற்பத்தி செய்யப்பட்டது. இது குழம்பியுள்ளது.

31.32: இது விழியாகும்.

41.43: அம்பு இதனை இப்படியும் சொல்வர். குழம்பியுள்ளது.

33.36: கவலை, துன்பம் யாவும் இதனுள் அடங்கும்.

www.tamilarangam.net

47.45: இது சிறு கணப்பொழுதாகும். குழம்பியுள்ளது.

53.52: நாம் அணியும் துணியும், சுடு பாலில் உறைந்து மிதப்பதும் இது.

62.64: இது வயோதிபம் ஆகும்.

60.57: குரங்கினத்தை இந்து இலக்கியத்தில் இப்படி அழைக்கப்பட்டு உள்ளது.

மேல் – கீழ்:

1 .17: மிருகங்களை வேட்டையாடுவதற்கும், எதிரிகளை தாக்குவ–தற்கும் இது பயன்படும்.

3 .19: கணவன் இறந்துபோனால், அவனது மனைவி இப்படியாகிவி–ட்டாள் என இந்துமதம், இலக்கியங்கள் மூலம் முதன்மைப்–படுத்தி இலக்கியம், கலாச்சாரத்தின்மூலமும் கற்பித்துள்ளது.

5 .21: உயிரற்ற உடல இப்படியும் அழைப்பர்.

6 .22: எமது நாட்டில் வளரும் ஒருவகைப்புல்லு இதுவாகும்.

16.40: ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள ஒரு நாடு.

31.23: ஓர் உயிர் உருவாவதற்கும், விடயம் ஒன்று முழுமை பெறு–வதற்கும் இதுவே மூலமாகும்.

33.57: இது ஆபத்து ஆகும்.

46.38: கைதுசெய்யப்பட்ட ஒருவரை இப்படி அழைப்பர்.

47.63: நடுகைக்காக வளர்க்கப்படும் பண்படுத்தப்பட்ட பயிர் இதுவாகும்.

53.45: இது கடல் எனப்படும்.

60.52: ஒரு திசை காற்றின் பெயர் இது.

18.42: இது உருவம் அற்றது.

## கு. போ. இல: 22ன் பதில்கள்.

இடம் – வலம்:

1. 2: ஆடி
6. 4: விழுவு
9.12: யுத்தம்
15.14: வதை
17.20: தடயம்
29.27: கனவு
32.31: கறை
36.39: கருந்து
41.43: அவதி
45.48: மைதானம்
52.49: நரம்பு
58.57: சுமை
62.60: சாணம்

மேல் – கீழ்:

1.25: ஆயுதம்
6.14: விதை
–8–: கை
11.27: தயவு
15.47: வனத்துறை
29.45: கருமை
32.24: கலை
34.58: புவரசு
41.57: அம்மை
52.60: நம்
62.38: சாத்தான்
64.48: சினம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடிதங்கள்

ஆசிரியர், சஞ்சீவி

அன்புடையீர்,
திருவாளர் சாந்தன் சண் பற்றிய கட்டுரையாளர் சார்பில் எழுதிய விளக்கங் கண்டேன். (சஞ்சீவி 25, ப. 32-35).

* மா.ஓ கலாச்சாரப் புரட்சியை 1969ல் முடிவுகட்ட வேண்டி வந்த சூழ்நிலை பற்றி அறியாமல் ஏதோ மா.ஓ வை மீறி ஜோ என் லாய் செய்த காரியமென்று அவர் கூறுகிறார். 1976 இல் மா.ஓ வின் மரணம் வரை கட்சியில் அதிகாரம் யார் கையில் இருந்ததென அவர் அறிந்தால் இவ்வாறு எழுதியிருக்கமாட்டார்.

* டெங் 1975 இல் மா.ஓ வால் மீண்டும் கட்சியின் தலைமைப் பொறுப்பு ஒன்றுக்குக் கொண்டுவரப்பட்டு 1976ல் ஜோ என்லாய் மரித்த பின்பு நிகழ்ந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் சூத்திரதாரியெனக் குற்றம்சாட்டப்பட்டு முறையான விசாரணையின்றி அகற்றப்பட்ட அவர் அறியாதிருக்கக்கூடும்.

* 1971 இன் மா.ஓ கட்சியில் அதிகாரப் பொறுப்பில் இருக்கவில்லை என்ற வாதம் திரு. சண்முகதாசன் தனது அரசியலை நியாயப்படுத்தப் பயன்படுத்திய ஒரு அரை உண்மை. மூன்றாமுலகக் கோட்பாட்டிற்கான அத்திவாரம் 1960 களில் சீன- சோவியத் முரண்பாட்டின்போது இடப்பட்டாயிற்று. என்று சோவியத் யூனியன் 'சமூக ஏகாதிபத்தியம்' என அடையாளங் காணப்பட்டதோ, அன்றே அணிசேராத ஒடுக்கப்பட்ட நாடுகளின், தலைமைகளுடன் தன்னை நெருக்கிக்கொள்ள சீனா ஆயத்தமாகிவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* இலங்கையின் இரண்டு மா.— . கட்சிகளதும் தலைமையிலும் யார் இருந்தார்கள் என்று அறியாமலே அரசியல் விளக்கம் எழுதவல்ல ஒருவருடன் வாதாடும் ஞானம் எனக்கு இல்லை. (அவரது: பெயர்ப்பட்டியலில் ஒரு சிங்களவரது பெயரும் இல்லை என்பதோடு, ரொசாரியோ என்பவர் என்றுமே கட்சியின் தலைவர்களுள் ஒருவரல்ல என்பதும் கவனத்துக்குரியன.)

* 'சண் ஒரு வரலாற்றுத் தடயம்' என்ற கட்டுரையின் ஆசிரியர் என்ன எழுதப் போகிறார் என்றும் திரு. சாந்தன் அறிவார் என்பதும் ஒரு குறிப்பிடத்தக்க விஷயம்.

'சஞ்சீவி' இதழ் எனக்கு அனுப்பப்பட்ட நோக்கம் இதழ் பற்றிய எனது கருத்துக்களை அறிய என்ற நோக்கிலேயே சுருக்கமாக எழுதினேன். (விரிவாக எழுத அவகாசமுள்ள கலாநிதி வேறு யாராவது இருக்கலாம்.)
அரை ஜீரணமான தகவல்களை (மேலே உள்ள உதாரணங்கள் போதுமென நம்புகிறேன்.) வைத்து எழுதுகிறவர்களுடன் செலவிட எனக்கு அதிக நேரமில்லை. அது நேர்மையீனம் என்றால் அப்படியே ஆகுக. ஆனாலும் வாயில் வந்தபடி யாரிடமோ பணம் வாங்கிக் கட்சி நடத்துவதாகக் குற்றஞ் சாட்டுவது மிகவும் அருவருக்கத்தக்க செயல். புதிய ஜனநாயகக் கட்சியின் பாதுகாவலன் நானல்ல. என் உதவியின்றி அவர் கட்சித் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள இயலும் என்றே நம்புகிறேன்.

"யா காவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

சொன்னவர் வள்ளுவர். (ஒரு வேளை பிற்போக்குவாதியாக இருக்கக் கூடும்!)

அன்புடன்,
சிவசேகரம்.

ஆசிரியர், சஞ்சீவி.
அன்புடையீர்,

25 ஆம் இதழில் திரு சாந்தனும், சண் பற்றிய கட்டுரையாளரும் வெவ்வேறு நபர்கள் என்ற விதமாகக் குறிப்பிட்டு எழுதினேன். 25 வது சஞ்சீவியில் கட்டுரையாளரின் பெயர் இல்லாததால் நேர்ந்த குழப்பம் அது. பின்னர் பிற விஷயங்களைப் பார்த்த பின்னே தவறு விளங்கியது. அதற்காக மிகவும் வருந்துகின்றேன்.

அன்புடன் சிவசேகரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சஞ்சீவி

மணிவண்ணன் எனது கவிதை "இன்று பௌர்ணமி" தொடர்பாக தனது விமர்சனப் பார்வையைக் கூறியிருந்தார்.

"வளவனின்" இன்று பௌர்ணமியில் மஹாகவியின் "சிறு நண்டு கரைமீது படமொன்று கீறும் சில வேளை அதை வந்து கடல் கொண்டு போகும்" என்ற வரிகளின் தாக்கம் மிகுதியாகத் தெரிகிறது, மேலும் 'கவிதையும் தலைப்பும்" பொருத்த மற்றது. புளிபோட்டு விளக்கியதொரு தாம்பாளம் எழுந்திடும் எழுவானில்" என்ற வரிகளால் அந்நியப்பட்டு நிற்கின்றது" என்றும் மணிவண்ணன் கூறுகின்றார்.

மெல்லப் பெருகி
ஆடி அசைந்து
அழித்த அலை
நண்டுகள் ஊர்ந்த தடத்தினை
கரைத் தேடும்

(எனது கவிதையின் பிரச்சினைக்குரிய பகுதி)

இக்கவிதையினை முதலில் படித்துக் காட்டிய போது அதைக் கேட்ட நண்பர்கள் மத்தியில் ஒருவர் மணிவண்ணன் கூறிய கவிதையின் வரிகளைச் சொல்லிக் காட்டினார். கவிதை சஞ்சீவி இதழ் 23 இல் பிரசுரமான பின்னர் இன்னொரு நண்பர் ஒருவர் தொலைபேசி மூலம் கவிதை, காட்சியை அழகாகச் சொல்லி நிற்கின்றது, கரைத் தேடும் என்பது கடைசிப் பந்தியில் கரைத்தேக என்று வந்த புளிபோட்டு என்று தொடர்வது பிரச்சினையாகவுள்ளது" என்றார். இதழ் 24 இல் சி. சிவசேகரம் "மெல்லப் பெருகி" என்றதில் (ப்) மிகையான அடைப்புக் குறியின் தேவை விளங்கவில்லை என்றும் கூறினார். இவைகள் அனைத்தும் கவிதை தொடர்பான விமர்சனங்கள்.

கவிதை எழுத வேண்டும் என்று அடம்பிடித்தவனல்ல நான். சஞ்சீவியின் படிக்கத்துடன் தான் கவிதை போல எழுதத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடங்கினேன். சஞ்சீவி, தூண்டில் போன்ற இதழ்களில் வெளிவந்தன. அவற்றில் சில கவிதைகள் சிலரால் பேசப்பட்டது. அந்தச் சிலரில் ஒருவருடன் "காட்சி" இப்போதைய கவிதைகளில் மிகக் குறைவாகவுள்ளன, என்று நீண்ட நேரம் பேசினோம். வீடு திரும்பியதும் காட்சி என்றால் வர்ணங்களும் முக்கியம் என்பதால் அதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன். அதன் வெளிப்பாடு தான் "இன்று பௌர்ணமி"

நான் பிறந்து வளர்ந்தது ஒரு சிறு மீன்பிடிக் கிராமம் அது தவிர மீன்பிடித் தொழிலும் செய்தவன் நான். ஒவ்வொரு பௌர்ணமியன்றும் நாங்கள் தொழிலுக்குச் செல்வதில்லை. மீன்பிடி உபகரணங்களைக் காயவைத்து, திருத்தி எடுக்கும் வேலைகளில் ஈடுபடுவோம். பௌர்ணமியன்று சந்திரோதயக் காட்சியினை பல வயதினரும் தமக்கேயுரிய அறிவுப் பின்னணியில் எதிர்கொள்வர். நானும் எனக்கேயுரிய அறிவுப் பின்னணியில் அந்தி சாயும் நேரத்தையும், சந்திரோதத்தையும் அந்தச் சூழலையும், நான் அனுபவித்த எனது அனுபவத்தையும், காட்சியையும் வர்ணங்களையும், கூறியுள்ளேன். புத்தம் புது மொட்டவிழ்த்த பூவரசம் பூவுக்கும், படுவானில் பௌர்ணமியன்று நிற்கும் சூரியனுக்கும், எழுவானில் பௌர்ணமியன்று எழும் சந்திரனுக்கும் புளிபோட்டு விளக்கிய தாம்பாளத்துக்கும் வர்ணங்கள் வேறல்ல.

மஹாகவியின் கவிதையில் வரும் (அவர் அனுபவித்த காட்சியும்) சம்பவமும், நான் அனுபவித்த சம்பவமும் ஒன்றாக இருந்தால் மணல், நண்டு, கடல், கடலலை, என்ற வரிகளை மற்றவர்கள் தீண்டக்கூடாது என்ற பொருளாகாது. அது தவிர மஹாகவியின் கவிதை ஒன்று பழைய "தேடல்" இதழில் இக்கால சூழல் குறித்தது மட்டும் படிக்க எனக்கு வாய்ப்புக்கிடைத்தது. நண்பர் ஆதவன் வாயிலாக பல கவிஞர்களின் கவிதைகளை அவர் சொல்லும் போது கேட்டதுண்டு. இத்துடன் எனது பொழிப்புரையினை முடித்துக் கொள்ளுகின்றேன்.

நட்புடன்

வளவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்பினிய தோழர் சஞ்சீவி ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். தாங்கள் அனுப்பிய இதழ் கிடைத்தது. நன்றி. அகதி வாழ்க்கையிலும் சிறப்பாகத் தொண்டாற்றும் தங்கள் தொண்டுள்ளத்திற்கு நன்றி.


'சுண்ணை' பற்றி அவர் இறப்பிற்குப்பின் தூற்றும் பலரிடமிருந்து, அவரைப் பற்றிய சரியான புரிதலுடன் சாந்தன் கட்டுரை அருமை. 'சுண்ணை'யின் இறுதிக்காலத்திலேயே அவருடன் கடிதம் மூலம் எமக்கு அவரின் தோழமை பூர்வமான நட்பு கிடைத்தது.

எமது புலம்பெயர்ந்தோர் இலக்கியத் தொகுப்பிற்கு, தங்கள் இதழ் தனில் வெளிவந்த சிறந்த சிறுகதை, கவிதை, அங்கு தமிழர்களுடன் ஏற்பட்ட புதுவிதமான அனுபவங்கள் முதலியவற்றை சஞ்சீவியில் வெளி வந்தவற்றை எமக்கு அனுப்பவும். இது ஒன்றே தாங்கள் எமக்குச் செய்யும் உதவியாகும்.

தோழமையுடன்,
ப. திருநாவுக்கரசு.

---

(42 ஆம் பக்கத் தொடர்ச்சி)



பரிசில்களுக்குரியோர் :

1. R.Ragavan
   4300 Holbæk.

2. V.Nathan
   5800 Nyborg.

3. P.Rajendran
   3520 Farum.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஊரெல்லாம்..

இன்று காலை விடிந்திருக்க
நானெழுந்தேன்....
எனது மனம்மட்டும் உறங்கியது.

நான் ஊரெல்லாம் உலவிவந்தேன்
எனது மனம் உலவலிலும்...

கட்டுப்பணத்தாள்கள்
கட்டறுந்த காற்றில் பறப்பதுபோல்
காய்ந்தசருகும் அய்ந்தாறு
குருவிகளும் பறக்க
கட்டுள்கிடந்த காற்று
வேகமாக அடிக்கிறது.

நானும் சேர்ந்து பறக்கின்றேன்!

தன்னுறக்கத்தில் மனம்
கோரக்கனவுகண்டு
என்னையே கொலைசெய்ய
நானிறந்துவிட்டேன்.

காய்ந்தசருகும் அய்ந்தாறு
குருவிகளும் பறக்க
கட்டுள்க்கிடந்த காற்று
வேகமாக அடித்து
இறந்தும் நான் துடிக்கின்றேன்!

மனம்மட்டும்
கோரக்கனவுகண்டதனால்...
என்னைக்கொன்றதுபோல்...
ஊரெல்லாம்..!

31.08.1992.
லோகநாதன்.செ.

www.tamilarangam.net

# அமெரிக்க ராட்சசனால் அழியும் மழைக்காடுகள்.

தங்கரூபன்

இன்று மனித இனம் எதிர்நோக்கியுள்ள அபாயங்களில் சுற்றுச் சூழல் நாசமாகுதல் முக்கிய பங்கு வகிக்கின்றது. உலகில் ஒருபுறம் பெரும் வரட்சியும், மறுபுறம் பெருவெள்ளமும் என நாம் என்றுமறியாத, விசித்திரமான சம்பவங்களை அறிந்து வருகின்றோம்.

கைத்தொழில் வளர்ச்சியின் எதிர்விளைவுகள் இவை. குறிப்பாக ஏகாதிபத்திய, ஏகபோக, ராட்சத கம்பனிகளால் எவ்வித கரிசனையுமின்றி இயற்கை வளங்கள் அழிக்கப்படுதல், தேவைக்கதிகமான பொருட்கள் உற்பத்தி செய்தல் போன்றவற்றினால் இவை இன்றுள்ள நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

ஏகாதிபத்தியங்களின் லாபவெறிக்கு மூன்றாம் உலக நாடுகளே பலியாகி வருகின்றன. 1992ல் நடைபெற்ற சுற்றுச்சூழல், உயிரியல் மாநாட்டில் அமெரிக்கா கைச்சாத்திட மறுத்ததற்கான காரணம், கைச்சாத்திட்டால் அமெரிக்க நலனுக்கு கேடுவிளைவிக்கும் என்பதே!

மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை வளங்கள் அழிப்பு அந்நாடுகளின் மக்கள் விரோத அரசுகளின் அனுமதியுடனேயே நடைபெறுகிறது. "உலகத்தின் இதயம்" என கருதப்படும் மழைக்காடுகள் அழிக்கப்படுவது மிக வேகமாக நடைபெறுகின்றது. "இதே வேகத்தில் மழைக்காடுகள் அழிப்பு, சுற்றாடல் அசுத்தமாகுதல் நடைபெறுமாயின் நாம் (உலகமக்கள்) வெகுவிரைவில் மிகப் பெரிய அதிர்ச்சியை சந்திக்க நேரிடும்" என சுற்றுச்சூழல் ஆய்வு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

மத்திய அமெரிக்காவில் உள்ள மழைக்காடுகளை அழிப்பதில் முன்னணியில் நிற்கிறது "STONE CONTAINER COOPERATION" எனும் அமெரிக்க ராட்சத கம்பனி.

கோஸ்ரோரிக்கா (COSTA RICA) எனும் நாட்டில் எவ்வித அக்கறையுமின்றி செயற்பட்டு வரும் STONE கம்பனியின் செயற்பாடுகள் அசுத்தமானதாக உள்ளது.

மேற்படி நிறுவனம் COSTA RICA வில் மேற்கொள்ளும் திட்டங்கள் பற்றிய சில விபரங்களைப் பார்ப்போம்.

கோஸ்ரோரிக்காவின் "மிகப்பெரிய காடுகள் மீள்நடுகை திட்டம்" என ஸ்ரோன் (STONE CONTAINER COOPERATION) நிறுவனத்தால் அழைக்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கப்பமும் இத்திட்டம் மத்திய அமெரிக்காவில் எஞ்சியுள்ள மழைக்காடுகளை- யும் (RAINFORREST), அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளையும் அழிக்கும் அபாயம் உள்ளது என அமெரிக்க அமைப்பான ENVIROLINK NETWORK அறிக்கை வெளியிட்டுள்ளது.



STONE CONTAINER CO. ஸ்தாபனத்தின் திட்டம் கோஸ்ரோரிகா- வின் ஒசா (OSA) தீபகற்ப பகுதியிலும், தென்பகுதி பசுபிக்கடல் (புனாமாவை அண்டிய) பகுதியிலும் ஏற்கனவே இந்தியாவிலிருந்து மரங்கள் (MELINA) தருவிக்கப்பட்டு 10,000 ஏக்கர் நிலத்தில் நடப்படுள்ளது. இம்மரங்கள் 5 வருடங்களில் வளர்ந்துவிடும். 1995ம் ஆண்டுக்குள் 25,000 ஏக்கர் எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தனித்து ஒரே வகையான, நெருக்கமாக நடப்படும் 27 மில்லியன் மரங்கள் 5 வருடத்தில் வீழ்த்- தப்பட்டுவிடும்.

STONE நிறுவனம் நாளுக்கு 150 லொறிகளைப் பாவித்து வீழ்த்துகின்ற மரங்களை ஏற்றுவதற்காக அங்கேயே "மத்திய அமெரிக்காவிலேயே பெரிய மரக்காலை" நிறுவி, அங்கிருந்து வருடத்திற்கு 6.00.000 தொன் மரங்களை ஏற்றிச் செல்லவும் உள்ளது. மாதத்தில் இரண்டு தடவைகள் கப்பல் மூலம் அமெரிக்கக் கடுதாசித் தொழிற் சாலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

மரக் வீழ்த்துதல், பதப்படுத்துதலுக்கு 27 மில்லியன் மரங்கள் பலியாகவுள்ளது; இது காடு மீள் நடுகை செய்யும் ஒரு திட்டத்தின் உள்ளடக்கமாக உள்ளது என்பது ஆச்சரியமானது தான்!

STONE CONTAINER COOPERATION ஒரு ராட்சதக் கம்பனி யாகும். அமெரிக்காவின் 79வது நிறுவனம் என்பதுடன், உலகத்தின் 3வது

www.tamilarangam.net

பெரிய கடுதாசி உற்பத்தி செய்யும் நிறுவனமுமாகும். மனிதர்கள் பற்றியோ, சுற்றாடல் பற்றியோ எவ்விதமான அக்கறையும் இதற்கு கிடையாது என்ற செய்திகள் நாம் ஏற்கனவே அறிந்தது தான்.

அமெரிக்க தொழில் திணைக்களம் (OSHA) "தொழிற் சுற்றாடல்" குறித்து 706 குற்றங்களை இந் நிறுவனத்தின் மீது பதிவு செய்துள்ளது. MULTINATIONAL MONITOR எனும் பத்திரிகை சூழல், சுற்றாடல் அசுத்தம் செய்யும் குற்றவாளிகளாக விளங்கும் பத்து நிறுவனங்களில் STONE முதன்மை வகிப்பதாக கண்டனம் தெரிவித்துள்ளது.

ஹொண்டுராஸ் (HONDURAS) நாட்டில் சமீபத்தில், மக்கள் எதிர்ப்பால் அந்நாட்டு அரசு 16,000 சதுரமைல் காட்டு மரங்களை STONE நிறுவனம் வெட்டுவதை தடுத்துள்ளது.

COSTA RICA வில் STONE நிறுவனத்தின் திட்டம் நிறைவேறுமாயின் மிகப் பெரியளவில் லாபமடிக்கும் என்பதில் எவ்வித ஐயமில்லை. அதனால் ஏற்படும் பாதிப்புகள்.

* லொறிகள், மரக்காலை, துறைமுகம் போன்றவற்றால் OSA தீபகற்பத்திலுள்ள தாவரங்கள், உயிரினங்களின் வாழ்க்கை மிகவும் கடுமையாகப் பாதிப்படையும்.

* இயற்கைவள அமைச்சகம் (MIRENEM), மேற்படி நிறுவனத்தின் மீது எவ்விதமான வரியும் வசூலிக்காமல் விட்டுக் கொடுத்துள்ளது. வருடத்திற்கு, ஒரு ஏக்கர் நிலத்திற்குக் குத்தகையாக 18 — 90 அமெரிக்க டொலரை STONE நிறுவனத்திடமிருந்து பெற்று நிலத்தை நாசமாக்க அனுமதித்துள்ளது. மேற்படி திட்டம் எதிர்பார்த்த வேலை வாய்ப்புகளையும் வழங்கிவிடவில்லை. தற்போது 0.1 தொழிலாளரே ஒரு ஏக்கரில் உள்ளனர்.

* வளைகுடாவில் உள்ள நீர் அசுத்தமாவதால் உள்ளூர் மீனவர்கள் தங்கள் வாழ்க்கைக்கான அடிப்படையை இழக்கும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

* வாகனப் போக்குவரத்து, சத்தம், சுற்றாடல் மாசடைதல் போன்றவற்றால் இயற்கை வள சுற்றுலாத்துறையும், அதனால் உருவாகும் வேலை வாய்ப்பையும், மழைக்காடுகள் பாதுகாப்பையும் முற்றாக அழிந்துவிடும்.

OSA தீபகற்ப விவசாயிகள், சுற்றாடல் பாதுகாப்பாளர்கள், வர்த்தகர்கள், பூர்வகுடிகள், சுற்றுலாத்துறையினர், நகர சபை தலைவர்கள் மற்றும் குடிமக்கள் சமீபத்தில் ஒன்று கூடி ஓர் அமைப்பைக் கட்டியுள்ளனர். இதன் நோக்கம் STONE நிறுவனம் மேலும் தமது திட்டத்தை விரிவுபடுத்தல், துறைமுக விஸ்தரிப்பு, மரக்காலை கட்டுவதை தடுத்தல் போன்றவற்றை எதிர்ப்பதாகும்.

"கோஸ்ரோரிக்கா நிகழ்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ இத்திட்டத்தால் ஏற்படும் விளைவை எவ்விதமான பலனையும் அடையாமல் நாசத்தை மாத்திரம் தேடியுள்ளது என்பது அவர்கள்

முன்னிருக்கும் அபாயம்" என கருதுகின்றார்கள். கோஸ்ரோ ரிக்காவின் உள்ளூர் சுற்றாடல், உயிர் ஆராய்ச்சி நிறுவனமும் (AECO), RAIN FORREST ACTION NETWORK என்ற அமெரிக்க நிறுவனமும் மக்கள் அமைப்புக்கு உதவி புரிந்து வருகின்றது.

ENVIROLINK NETWORK எனும் அமைப்பு STONE நிறுவனம் பற்றி "ELECTRONIC NETWORK INTERNET" எனும் செய்தி ஊடகத்தின் மூலம் கோஸ்ரோ ரிக்கா மக்கள் மத்தியில் செய்திகள் வெளியிட்டுள்ளது. அவை பின்வருமாறு கூறுகின்றது.

* கோஸ்ரோ ரிக்கா இயற்கைவள அமைச்சகத்திற்கு கடிதம் எழுதுங்கள்.
* உள்ளூர் சுற்றாடல், சூழல் பாதுகாப்பு அமைப்புக்குத் தேவையான நிதி சேகரியுங்கள்.
* பகிரங்கமாக STONE நிறுவனத்தின் திட்டம் பற்றியும், அதனால் ஏற்படும் பாதிப்பையும் விளக்குங்கள்.


STONE நிறுவனத்திற்கு நல்லது எனக் கருதப்படுபவை நிச்சயமாக மனிதர்களுக்கோ, அல்லது இயற்கைக்கோ, மூன்றாம் உலகத்திற்கோ நல்லதல்ல.

---

பின்குறிப்பு: மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சிக்கு உதவும் திட்டங்கள் எனவர்ணிக்கப்படும் இது போன்ற திட்டங்கள் பற்றி முதலாளிய பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதிவருகின்றன. டென்மார்க்கில் வெளிவரும் POLITIKEN எனும் பத்திரிகை (நாளேடு) கோஸ்ரோ ரிக்காவின் மழைக்காடுகள் பற்றி பல கட்டுரைகள் வெளியிட்டது. குழந்தைகளுக்கு உதவுதல், பாடசாலைகள் கட்டுதல் போன்ற விடயங்களை பெரிது படுத்தி எழுதியது. ஆனால் STONE நிறுவனம் பற்றி மூச்சே விடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுப்பையபேட்ட
பேர்கள்
கொண் பயிர்

(5ம் பக்க தொடர்ச்சி)



இது பெரிய விலை.

உலகில் வேறு யாரும் இதுவரை கொடுத்திராத பெரிய விலை.

இதை இன்னுமுள்ளவர்கள் எப்போ தான் புரிந்து கொள்ளப் போகிறார்களோ?

-நன்றி சரிநிகர்



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## குறுக்கெழுத்துப்போட்டி

இல 25

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 5 | 6 | 7 | ■ |
| 9 | ■ | 11 | 12 | 13 | 14 | ■ | 16 |
| 17 | 18 | 19 | ■ | 21 | 22 பு | 23 | 24 |
| ■ | 26 ரு | ■ | ■ | ■ | ■ | 31 | 32 |
| 33 | 34 | 35 | 36 | ■ | 38 | ■ | 40 |
| 41 | 42 | 43 | ■ | 45 | 46 | 47 | ■ |
| 49 | ■ | ■ | 52 | 53 | ■ | 55 | ■ |
| 57 | 58 | 59 | 60 | ■ | 62 | 63 து | 64 |

உங்கள் பாவனைக்கு:-

அலுவலகப்பாவனைக்கு:-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

ம:26 ,No:25

afs. ______________________________
______________________________
______________________________
______________________________

www.tamilarangam.net

# சஞ்சீவி

## ஆறு மலர்களுக்கான சந்தா

| | |
|---|---|
| Switzerland<br>France<br>Italy<br>London<br>Germany | 25 u$ |
| Canada<br>Australia | 29 u$ |
| Sweden<br>Norway | 125kr. |
| Danmark | |

காசோலை எடுக்கவேண்டிய வங்கிக் கணக்கிலக்கமும், முகவரியும்

A/C.NO.7601-408876-9
CHANCHIVE
Vestjysk Bank
7500-Holstebro,
Danmark.

காசோலை அனுப்பவேண்டிய முகவரி

CHANCHIVE
Danmarksgade.10
7500 Holstebro
DANMARK

"மறுக்கப்பட்டு,பழக்கமற்றுப்போனதொரு சுதந்திரமான
கருத்துப்பரிமாற்றலை உருவாக்குவதற்கு
எல்லோரது கருத்துக்களும்,
விமர்சனங்களுமே
வழிவகுக்கும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

CHANCHIVE
Danmarksgade.10
7500 Holstebro
DANMARK

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்